Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :55 தை 6ஆம் நாள் திங்கட்கிழமை 20 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2020
24 25 26
ஜனவரி / January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்னும் 4 நாட்களில்

## விபத்தில் முதியவர் சாவு

தென்மராட்சி, ஜன. 20
மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்து 05

## விபத்தில் 5பேர் சாவு

கொழும்பு, ஜன.20
கதிர்காமத்திலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த பேருந்து 04

## இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.20
உறவினர்களுடன் வசித்து வந்த இளைஞன் சடலமாக நேற்று மீட்கப்பட்டார். 04

# காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் உயிரோடு இல்லை

## புலிகள் மீது பழி போடுகிறார் கோத்தாபய




கொழும்பு, ஜனவரி 20

காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் உண்மையில் உயிரிழந்து விட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர். அல்லது கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்டனர். புலிகளே இதற்குப் பொறுப்பு. இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரை, கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகார 23

## தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்!

### சம்பந்தன் எம்.பி. முழக்கம்



திருகோணமலை, ஜன. 20
தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும்வரை எமது இனத்தின் 23

## ரெலோவுக்குள் மீண்டும் பிளவு

வவுனியா, ஜன. 20
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு ரெலோ சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விவகாரத்தால் அந்தக் கட்சிக்குள் குழப்பங்கள் 23

## தமிழக மீனவர்களை தாக்கியது கடற்படை

### படகும் மூழ்கடிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 19
இலங்கைக் கடற்படையினர் கல்லால் எறிந்தும், படகால் 05

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை உடன் நிறுத்துக!

### மன்னிப்புச் சபை அழுத்தம்

கொழும்பு, ஜன. 20
இலங்கையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டவரும் தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. இதுவ 23

### முச்சந்தி முரளி



முதலில உங்கட கட்சி உடையாமல் பாருங்கோ பிறகு கூட்டமைப்பை பலப்படுத்திறதப்பற்றி கதைக்கலாம்...!

## பட்டப்பகலில் வாள்வெட்டு

மானிப்பாய், ஜன. 20
மானிப்பாயில் பட்டப் பகலில் நேற்று வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மானிப்பாய் கட்டுடை அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவுள்ள ஊடகவியலாளரின் வீட்டின் மீது நேற்றுப் பகல் 2 மணிக்கு 23

## மூவினத்தவரும் இணைந்து தமிழில் தேசிய கீதம்!

கொழும்பு, ஜன. 20
கொழும்பிலுள்ள சிங்கள, முஸ்லிம், தமிழ் இளையோர் இணைந்து தமிழில் தேசிய கீதம் பாடி 08

## விக்னேஸ்வரன் வந்தால் கூட்டமைப்புக்கு பலம்

### சொல்கிறார் செல்வம் எம்.பி.



வவுனியா, ஜன. 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மாறினால் அதில் இணைவதற்குத் தயார் என்று முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ள கருத்து என்னைப் பொறுத்த வரையில் நல்ல விடய 23

## சகல பட்டதாரிகளுக்கும் உடன் பணி நியமனம்

### ஜனாதிபதி உறுதியளிப்பு

கொழும்பு, ஜன. 20
தொழிலை எதிர்பார்த்துள்ள அனைத்துப் பட்டதாரிகளையும் தேசிய பொருளாதாரத்தில் நேரடிப் பங்காளர்களாக்கும் வகையில் உடனடியாக அரச தொழில்களுக்கு நியமிப்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். நாடு முழுவதும் 23

## 18 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது



சாவகச்சேரி, ஜன.20
வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில், 18 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மதுவரித் திணைக்க 07

# தொழிற்சங்க நடவடிக்கை ஆசிரியர் சங்கம் தயார்!

**யாழ்ப்பாணம் ஜன.20**

**யாழ். வலய இடமாற்றங்களில் பாரபட்சங்கள் காட்டப்படுவதால் தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கான உள்ளக இடமாற்றங்களில் பக்கச்சார்பான முறையற்ற செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேன்முறையீட்டு சபை மூலம் பரிசீலிக்கப்படாது ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் தன்னிச்சையாக நிராகரிக்கப்படும் நிலையில் ஒரு சிலரது மேன்முறையீட்டுக்கு மாத்திரம் பக்கசார்பான முறையில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இடமாற்றசபையின் திர்மானங்களுக்கு அமைய பொதுவான நீதி பின்பற்றப்பட்டவில்லை. இந்த பாரபட்சமான செயற்பாடுகள் காரணமாக ஆசிரியர்கள் பலர் மனஉழைச்சலுக்குள்ளாகியுள்ளனர். வலயக்கல்விப்பணிப்பாளர் நீண்ட விடுப்பில் உள்ளமையால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. யாழ் வலயக்கல்வி பணிமனை நிர்வாகத்துக்குப் பொறுப்பாக நீண்ட காலமாகப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. கடமையில் உள்ள அதிகாரிகள் வெவ்வேறு தீர்வுகளைக் கூறுகின்றனர். இதனால் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக அலைக்கழிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான பாரபட்சமான முறைகள் மேன்முறையீட்டு சபை கூடுவதற்கு முன்னர் தீர்க்கப்படவேண்டும். இவ்வாறான பாரபட்சமான அணுகு முறையிலான இடமாற்றங்களை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பாரபட்சமாக இடமாற்ற அணுகு முறை தொடருமாயின் வழங்கப்பட்ட முறையற்ற இடமாற்றங்கள் அனைத்துக்குமாக பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வோம்" என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக யாழ் கல்வி வலயக்கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது இது தொடர்பாகத் தான் கருத்து எதுவும் கூறமுடியாது எனத் தெரிவித்தார். (ந)

# மணியம் தோட்டம் மக்களுடன் சந்திப்பு

மணியம்தோட்டம் பகுதியில் வீட்டுத் திட்டப் பயனாளிகளை, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தேசிய வீடமைப்பு அமைச்சின் பரிந்துரைகளுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஆலோசனைக்கு அமைவாக, தேசிய வீடமைப்பு அதிகாரச் சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் தலைமையிலான குழுவினர் மக்களைச் சந்தித்தனர். மணியம் தோட்டம் ஜே 89 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வீட்டுத் திட்டப் பயனாளிகளைச் சந்தித்த குழுவினரால் வீடுகள் அரை நிரந்தரமாக கட்டப்பட்டு, மிகுதிக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

ஏனைய கொடுப்பனவுகள், எந்தக் காலப்பகுதியில் கொடுக்கப்பட வேண்டும். அதற்கான தீர்வுகள் என்ன. என்பது பற்றியும் மக்களிடம் கேட்டறிந்தனர்.

வட்டிக்குப் பணம் பெற்று அவற்றை மீள செலுத்த முடியாமல் உள்ளதாகவும் வீடுகளைக் கட்டுவதற்கு, பணத்தைக் கொடுத்து, அதனூடாக வீடுகளை முழுமையாக்கித் தருமாறு மக்கள் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தனர். கொழும்பில் இருந்து வருகை தந்த குழுவினர் பயனாளிகளின் வீடுகளைப் பார்வையிட்டதுடன், விசேட தேவைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர். (சு-106)

# கரோல் நிகழ்வு நிதி பேராயரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜன.20

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை 30 இலட்சம் ரூபா பெறுமதியுடைய காசோலையை கார்டினல் மல்கம் ரஞ்சித் பேராயரிடம் கையளித்தார்.

இந்த நிதி நத்தார் கரோல் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டோரின் நலன்பேணலுக்காக செலவிடுவதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது.

கார்டினல் மல்கம் ரஞ்சித் பேராயரின் ஒருங்கிணைப்பு செயலர் ஐவன் வித்தானகமகே குறித்த காசோலையைப் பெற்றுக்கொண்டார். (ஒ.5)

# விபத்தில் பெண் காயம்

வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

குருமன்காடு பகுதியிலிருந்து ரயில் வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், சிறு வீதியால் திரும்ப முற்பட்ட போது. வீதியில் பின்புறமாகப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்களில் ஒரு பெண் ஒருவர் காய மடைந்தார். அவர் வவுனியா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-110)

# 27,541 பேருக்கு அரவணைப்புக் கடன்

யாழ்ப்பாணம், ஜன.20

அரவணைப்புகடன் வழங்கும்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டில் மட்டும் 27 ஆயிரத்து 541 பேருக்கு கூட்டுறவுச் சங்கங்களால் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள் மற்றும் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களால் இந்த அரவணைப்புக் கடன் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஆறாயிரத்து 273 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் மூவாயிரத்து 235 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாயிருத்து 840 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் ஏழாயிரத்து 393 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் ஏழாயிரத்து 800 பேருக்கும் அரவணைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் ஏனையோருக்குச் சுயதொழில் ஊக்குவிப்புக்காக கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ளன. முதலில் இருபது ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்ட கடன் தொகை பின்னர் ஐம்பது ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடனுதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஓர் அங்கத்தவராக இணைய வேண்டும். கடனைப் பெற்றுக் கொண்டவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் அவற்றை முழுமையாகச் செலுத்த வேண்டும். அரவணைப்பு கடன் வழங்கும் திட்டத்தால் அநேனகமான பயனாளிகள் நன்மையடைந்துள்ளனர். கடனை மீளச் செலுத்தியவர்கள் மீண்டும் கடனுக்கு விண்ணப்பித்துள்ளனர். (க-17)

# சி.ஐ.டியின் கீழ் ரி.ஐ.டி.

கொழும்பு, ஜன.20

பயங்கரவாத விசாரணை பிரிவு (ரி.ஐ.டி.) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குப் (சி.ஐ.டி.) பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நுவன் வெதசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் ரவீ செனவிரத்ன ஓய்வு பெற்றதன் பின்னர் குறித்த பதவி வெற்றிடத்துக்காக் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு பிரதி பொலிஸ் மா அதிபர் நுவன் வெதசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஒ.5)




தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாங்குளம் உயிரிழை அமைப்பின் பயனாளிகள் 20 பேருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வு மாங்குளம் உயிரிழை அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ஐ-222)





# சிங்கலே, ராவண பிக்குகள் நீராவியடிக்கு திடீர் வருகை



முல்லைத்தீவு.ஜன.20

சிங்கலே மற்றும் ராவண பலய என்ற கடும்போக்குச் சிங்கள பௌத்த அமைப்புகளைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் சிலர் முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு நேற்று முன்தினம் இரவு திடீர் விஜயம் மேற்கொண்டனர்.

பௌத்த கலாசார மத்திய நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் ராவண பலகாய அமைப்பின் தலைவர் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரோ மற்றும் சிக்கலே அமைப்பைச் சேர்ந்த மடில்லே பஞ்ஞாலோக தேரோ ஆகியோர், பிள்ளையார் ஆலயப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையைச் சேர்ந்த அமைப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு எதிரே உள்ள இராணுவ முகாமுக்குள் நீராவியடிப் பகுதியில் அமைந்துள்ள குருகந்தே ரஜமகா விகாரையின் தொன்மையைச் சொல்லும் தொல்பொருள் சிதைவுகள் இராணுவத்தினரால் அருங்காட்சியகமாக வைக்கப்பட்டுள்ளன. அந்த இடத்துக்கும் சென்று பார்வையிட்டனர்.

“கொழும்பில் இருக்கும் பௌத்த பிக்குகளை விட வடக்கு கிழக்கில் வசிக்கும் பிக்குகள் பல்வேறு இன்னல்களைச் சந்திக்கின்றனர். தமிழ் இனவாதிகளால் அவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த நிலைமைகளை ஆராயும்நோக்கோடும், பாதுகாப்பை ஏற்படுத்தி பௌத்த மதத்தை வளர்க்கும் நோக்கோடும் இங்கு வருகை தந்தோம்” என்று ராவண பலகாய அமைப்பின் தலைவர் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

(க-246)

## மருத்துவமனையில் நேற்று சிரமதானம்

வவுனியா,ஜன.20

வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் நேற்று சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

“டெங்கு அற்ற பிரதேசமாக எமது பகுதியை வைத்திருப்போம்“ எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையினர், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினர் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவமனை வளாகம் , வாகனத் தரிப்பிடம் , விடுதிகள் போன்றவற்றைப் பொதுப் பரிசோதகர்கள் பரிசோதனை செய்தனர். தாதிய உத்தியோகத்தர்கள் , சிற்றூழியர்கள், துப்பரவுப் பணியாளர்கள் மற்றும் வவுனியா பொலிஸார், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

(க-18)



## மருத்துவர் இல்லை நோயாளர்கள் அவதி

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு பிரதேச மருத்துவமனையில் மருத்துவர் இன்மையால் நோயாளர்கள் பெரிதும் அவதிப்பட்டனர். மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக நிரந்தர மருத்துவர் இன்மையால், பதில் மருத்துவர்களே சேவையாற்றி வந்தனர். இந்த நிலையில் மருத்துவமனையில் பதில் மருத்துவரும் நேற்று முன்தினம் வருகை தராதமையால், வருகை தந்த நோயாளர்கள் மருத்துவ சேவைகளைப் பெறமுடியாமல் திரும்பிச் சென்றனர். இது தொடர்பில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

“மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகவே மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. சரியான முறையில் மருத்துவமனை இயங்காது விட்டால், மருத்துவமனையை இழுத்து மூடிவிட்டு, இயங்குகின்ற மருத்துவமனைகளையாவது சரியான முறையில் இயக்க வேண்டும். மருத்துவர் இல்லாத நிலையில், மருத்துவமனைக்கு வருகை தருகின்ற நோயாளர்கள் எவ்வாறு மருத்துவ சேவைகளைப் பெறமுடியும். இதற்குரிய அதிகாரிகள் இது தொடர்பில் சரியான முறையில் செயற்பட்டிருந்தால், இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. கரைதுறைப்பற்றுப்பிரதேசஅபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இது தொடர்பில் உரியவர்களுக்கு அழுத்தங்களை வழங்குவேன்” என்று ரவிகரன் தெரிவித்தார்.

(க-246)

## கூட்டுறவு சங்கங்களை தரப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.20

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை அவற்றின் நிதி மற்றும் தொழிற்பாட்டுக்கு ஏற்ற வகையில் தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சங்கங்களின் நிர்வாகத்தினர் அதற்கான குழு ஒன்றை அமைத்து, அந்தக்குழு மூலம் தரப்படுத்தலை மேற்கொண்டு உரிய மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களின் அனுமதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். தரப்படுத்தலின் போது தரங்களுக்கு ஏற்ப பணியாளர் தொகுதியினரின் பதவிகளையும், பதவிக் குறியீடுகளையும் சங்கங்கள் மாற்றியமைக்கலாம். இந்தச் சீராக்கத்துக்கு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரின் சிபாரிசுடன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தரப்படுத்தப்பட்ட சங்கங்கள் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளின் பின்னர் மீள்பரிசீலனை செய்து தரப்படுத்தலின் முன்னேற்றத்தைக் காண்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள முடியும். தரப்படுத்தப்பட்ட சங்கங்களின் தரத்தைப் பெறுவது சம்பந்தப்பட்ட சங்கங்களின் இயக்குநர் சபையின் கடமையாகும். அத்துடன் ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும், தரப்படுத்தப்பட்ட சங்கங்களின் முன்னேற்றம் தொடர்பான ப்ட்டியல், கூட்டுறவுசங்கப்பதிவாளரால்வெளியிட்டுவைக்கப்படும். வடமாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைத் தரப்படுத்துவதற்காகக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சங்கங்களைத் தரப்படுத்துவதற்கு உரிய ஆலோசனை சங்கங்களுக்கு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களால் வழங்கப்பட்டிருந்தன. தரப்படுத்தலில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், இரண்டாம் படி கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், ஏனைய வகைச் சங்கங்கள் என வகைப்படுத்தப்படும். அவற்றுக்கான நிபந்தனைகள் கருத்திலெடுக்கப்பட்டு தரப்படுத்தல் செய்முறையை நிறைவேற்றிய கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்று கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(க-17)





தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் வருடாந்த ஒன்றுகூடலும், கலைவிழாவும் மருத்துவமனை அத்தியட்சகர் விமலசேன தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

(க)



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பொங்கல் விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவில், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(க-159)



# பொலிஸ் அதிகாரியே ஸஹ்ரானின் 'குரு'

## ஆணைக்குழுவில் சாட்சியம்

கொழும்பு, ஜன. 20
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சூத்திரதாரி ஸஹ்ரான் காசிம், குண்டு தயாரிக்க எவ்வாறு கற்றுக்கொண்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. உள்ளூர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சியொன்றில், பொலிஸ் அதிகாரியொருவர் வழங்கிய விளக்கத்தைக் கேட்ட பின்னரே ஸஹ்ரான் வெடிகுண்டுகளைத் தயாரிக்கப் பழகியதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் தெரிய வந்துள்ளது ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில், பயங்கரவாத தடுப்பு பிரிவின் காவலில் உள்ள ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ளார். இதன்போதே இந்தத் தகவல்கள் வெளியாகின.

சந்தேகநபர் பிரத்தியேக இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டு, காணொலி தொழில்நுட்பம் மூலம் ஐவர் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்துள்ளார்.

'இலங்கை இஸ்லாமிய மாணவர்கள் என்ற அமைப்பில் செயற்பட்டேன். 2012ஆம் ஆண்டில் ஜமா அய்த் இஸ்லாமிய அமைப்பில் இணைந்து 2013ஆம் ஆண்டு முதல் மாகாண ஒருங்கிணைப்பாளராகி பின்னர் அமைப்பின் தேசிய அமைப்பாளராகவும் இருந்தேன். 2018ஆம் ஆண்டில் திகன பகுதியில் ஏற்பட்ட மோதல்களுக்குப் பின்னரே ஸஹ்ரானை நானும் எனது குழுவினரும் முதன்முறையாக சந்தித்தோம். மசூதிகளைத் தாக்கியவர்களை திருப்பித் தாக்க வேண்டுமென ஸஹ்ரான் எம்மிடம் தெரிவித்தார்.

நுவரெலியா, அம்பாந்தோட்டையிலுள்ள இரகசிய மறைவிடங்களில் ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றோம். முகாம்களில் நான் உட்பட 150இற்கும் மேற்பட்டவர்களுக்கு ஸஹ்ரான் ரி56 துப்பாக்கி யைக் பயன்படுத்துவது தொடர்பாக பயிற்சியளித்துள்ளார். வனாத்தவில்லுப் பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சி முகாம் சிக்கிய பின்னரே தற்கொலைத் தாக்குதல் நடத்தவேண்டுமென ஸஹ்ரான் முடிவுக்கு வந்தார். பௌத்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டுமென்றுதான் ஸஹ்ரான் குறிப்பிட்டிருந்தார். ஏன் கிறிஸ்தவர்களைக் குறி வைத்தார்கள் என்பது தொடர்பாக எனக்குத் தெரியாது.

வெடிகுண்டு தயாரிப்பதைப் பற்றி ஸஹ்ரான் முன்னர் அறிந்திருக்கவில்லை. அப்படியான காட்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியிருக்காமல் விட்டால், ஸஹ்ரானால் வெடிகுண்டு தயாரித்திருக்க முடியாது, என்று சாட்சியமளித்துள்ளார்.

(ஒ.5)

## வெள்ளவத்தையில் விருந்தினர் விடுதி

**அமைவிடம் :- காலி வீதி, வெள்ளவத்தை, பசல்ஸ் லேன். இல.39/1.**
**(வெள்ளவத்தை சந்தைக்கு அருகிலுள்ள வீதி)**

- காலி வீதியிலிருந்து 5 நிமிட நடை தூரத்திலுள்ளது.
- அமைதியான இடம் மற்றும் வாகன தரிப்பிட வசதியையும் கொண்டது.
- மூன்று மாடிகளுடன் 15 அறைகளைக் கொண்டுள்ளது.
- ஒருவர், இருவர், மூவர் மற்றும் குடும்பமாகவும் தங்கக்கூடிய அறைகளைக் கொண்டது.
- குளிரூட்டி மற்றும் சுடுநீர் வசதிகளைக் கொண்ட அறைகள். அறையாகவும் வீடாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
- ரூ.2500 இலிருந்து 4500 வரையான விலைகளில் அறைகள் வழங்கப்படும்.

(AVA/1084)(11,17)

**077 996 9478 , 077 332 8510**

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### நடராசா இரங்கநாதன்



நின் பண்புக்கு நிகராக பாரினில்
- யாருண்டு
நீங்கள் செய்த புண்ணியங்கள்
- என்னை வாழவைக்கும்
நேரிய என் பயணம் உங்கள்
- நடத்துதலில் வழிதொடரும்
வான் வீட்டில் நீங்கள் அமர்ந்து
- வாழ்த்து மழை பொழிந்திடுங்கள்

அன்பு மனைவி இ.சாரதாதேவி
29 /21, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிறப்பு 01.04.1951 — இறப்பு 15.01.2011
திதி: தைமாத பூர்வபக்க ஏகாதசி

## மரண அறிவித்தல்

### முத்தையா இராசநாயகம்



தோற்றம் 14.12.1951 — மறைவு 19.01.2020

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராசநாயகம் நேற்று **(19.01.2020)** ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காஞ்சன், லிந்துயா, சிந்துயா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காஸ்திரி (கவிதா)வின் அன்புப் பெரிய தந்தையும் சஞ்சீவன், பிரதீசன், ரவிசங்கர் ஆகியோரின் அன்பு மாமனும் தமிழீழன், தமிழாளன், தருசித், லஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் கிருஸ்ணமூர்த்தி, புஸ்பேஸ்வரி, யோகேஸ்வரி, இராசேஸ்வரி, பாஸ்கரன், ஸ்ரீசந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ரவீந்திரராசாவின் அன்புச் சகலனும் யோகேஸ்வரி, வீரசிங்கம், கந்தசாமி, சத்தியசீலன், யோகமங்களேஸ்வரி, தமயந்தி, இராசேஸ்வரி, யோகேஸ்வரி, தங்கேஸ்வரி, புஸ்பராசமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகீரதி, சுதாகரன், தர்மினி, ஜீவினி, யசோதா, சதீஸ், சுரேஸ், மணிகரன், லதா, நிசாந்தினி, கம்சனா, கம்சிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் இளங்கோ, இளமதி, இளவேணி, இளவேந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் எழிலரசி, சிலம்பரசன், எழில்வேந்தன், பானுசன், குகதாஸ், அபிவர்னா, மஞ்சுதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(20.01.2020)** திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் **11.00** மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்லாரை வீதி,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இ.காஞ்சன் (077 889 4217), சு.சஞ்சீவன் (077 248 7172

## மரண அறிவித்தல்

### அருணாசலம் (கணபதிப்பிள்ளை) இலட்சுமி



தோற்றம் 11.02.1937 — மறைவு 17.01.2020

அத்துளு அம்மன் கோயிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் (கணபதிப் பிள்ளை) இலட்சுமி கடந்த **(17.01.2020)** வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(20.01.2020)** திங்கட்கிழமை முற்பகல் **9** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி ஐஸ்வரியம் செல்லத்துரை



உடுவில் கிழக்கு நாகம்மாள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐஸ்வரியம் செல்லத்துரை நேற்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற முத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் செல்லத்துரையின் அன்பு மனைவியும் செல்வறஞ்சன், ஜெயறஞ்சன், பாலறஞ்சன் (கெனி), செல்வறஞ்சினி (ஆசிரியர் - யா/ ஸ்கந்தவரோதையாக் கல்லூரி, சுன்னாகம்) ஜெயறஞ்சினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜீவகலா, மதனி, சுகந்தி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, இராசரத்தினம், மற்றும் மகேஸ்வரி, இராஜினிதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2020) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகம்மாள் வீதி, உடுவில்

தகவல்:குடும்பத்தினர்

## இளைஞனின்...

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த யோண் றொபேட் நிதர்சன் (வயது-21) இளைஞனே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

(ஓ.5,26)

## விபத்தில்...

மாத்தறை திஸ்ஸ வீதியின் ரன்ன பகுதியில் ரிப்பருடன் நேற்று இரவு 9 மணியளவில் மோதியது. சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயமடைந்தனர்.

(ஓ.5)

## தமிழக...

இடித்தும் நடத்திய தாக்குதலில் இந்திய மீனவர்களின் படகொன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும், நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி உட்பிரவே சித்து மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து கடற்படை யினரால் இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்ப டைக்கப்பட்டு நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தப்பட்ட னர். அவர்களை எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தெரிவித்ததாவது: நேற்றுமுன்தினம் சனிக் கிழமை ஜெகதாப் பட்டினத்திலிருந்து மீன்பிடிக்கப் புறப் பட்டோம். எமது படகின் ஜி.பி.எஸ். கருவி பழுத டைந்து விட்டது. இரவு 8 மணியளவில் இலங் கைக் கடற்படையினரின் படகு எம்மை நோக்கி வந் தது. நாம் வேகமாகப் பய ணிக்க முற்பட்டோம். கடற் படையினர் பெரும் கற்க ளைக் கொண்டு எம்மைத் தாக்கினர். எமது படகு சேதமடைந்தது. சேதம டைந்த படகின் மீது கடற்ப டையினரின் ரோறாப் பட கும் முட்டியது. எமது படகு மேலும் சேதமடைந்தது. எமது படகில் ஏறிய கடற்படையினர் எம்மை தமது படகில் ஏற்றினர். எமது படகையும் எடுத்து வந்தனர். கடல் நீர் படகின் உடைந்த பகுதிகளுக்கு ஊடாக உட்புகுந்தது. கடலில் மூழ்கியது, என்றனர்.

(ஓ.5,20,26,105)

## விபத்தில்..

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான முத்தையா இராசநாயகம் (வயது-69) என்பவரே இவ் வாறு சாவடைந்துள்ளார்.

தைப்பொங்கல் அன்று, தோட்டத்துக்குச் சென்று முதி யவர் வீடு திரும்பியுள்ளார். மீசாலை அல்லாரை பிர தான ஒழுங்கையில் சைக்கிளில் அவர் சென்றபோது, குறுக்கு ஒழுங்கையிலிருந்து பிரதான ஒழுங்கைக்கு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் காய மடைந்துள்ளார். பின்னர் சாவகச்சேரி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந் தார். இந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். இவருடைய இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற் கொண்டார். (ஓ.5,9,26)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவக்கொழுந்து விஸ்வலிங்கம்



ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த வருமான திருமதி சிவக்கொழுந்து விஸ்வலிங்கம் அவர்கள் 19.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா செல்லம்மா தம்பதி களின் மகளும் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் (பெருமான்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரியநாயகம் விஜயநாயகம் பத்மாசனி ஆகியோரின் தாயாரும் கேசவன், மாயவன், விமலன் (பிரான்ஸ்), பிரவின், தனுஷா ஆகியோரின் பேர்த்தியும் சாளினி, அபினா, அக்சயன், அவினாஸ், அபினயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2020) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காக நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**16/6, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (CS//30653) (11,17) **தகவல் : குடும்பத்தினர்.**

### திருமதி தேவசேனா ஸ்ரீபாலச்சந்திரன்



பிறப்பு 31.08.1950 இறப்பு 19.01.2020

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கெண்ட திருமதி தேவசேனா ஸ்ரீபாலசந்திரன் நேற்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தி லிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான காங்கேசு - இரத்தினபூபதி தம்பதிகளின் அன்பு மருமகளும் ஸ்ரீபாலசந்திரனின் அன்பு மனை வியும் றோகன் (உரிமையாளர் - Nada Techno, Wellawatta), காலஞ்சென்ற நிந்துஜா, மற்றும் அருணன் (The mens Collection, Vavuniya) ஆகியோரின் அன்பு தாயாரும், யாழினியின் (உரிமையாளர் - Nagarathnam Yoga Center, Wella watta) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் பாலச்சந்திரன், சாவித்திரிதேவி, பிறேமாதேவி, பானுமதி, குமரன் ஆகியோரின் அன்பு சகோ தரியும் காலஞ்சென்ற நடேசன் மற்றும் றோகினி, குகநேசன், ராயூ, இரவீந்திரன், லகுமதி, இந்திராதேவி, புஸ்பதேவி (நங்கி), கீர்த்திராணி, இந்திரகுமாரன், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் உதயசேகர் - கிருசாந்தி, உதயகுமார்- மயூரதி, சிந்துஜெயந்தி, வைஷ்ணவி, கார்த்திகாயினி, கிருத்தி காயினி, நிரோசன், ரஜீவன் ஆகியோரின் அன்பு பெரியதாயாரும், சஜித்குமார்- சிவகாமி, சஞ்சயன், சரன்யன், நர்மிகா, டினேஸ், யான்சி, நிதர்சினி (ரற்றி) ஆகியோரின் அன்பு மாமியும் சகானா, மிகுணன், ஜினோஸ் ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 773 0645, 077 048 8832** **தகவல்: குடும்பத்தினர்**

## நினைவஞ்சலிகள்

முப்பத்து நான்காம் ஆண்டு | முதலாம் ஆண்டு



மலர்வு 24.03.1920 உதிர்வு 02.08.1986

**சின்னத்துரை சிவசுப்பிரமணியம்**

(இளைப்பாறிய கொழும்பு மாநகரசபை குமாஸ்தா)



மலர்வு 20.09.1925 உதிர்வு 31.01.2019

**கனகம்மா சிவசுப்பிரமணியம்**

திதி: 20.01.2020

உயரிய சான்றோர் ஞானம் போதித்துத்
தன்னலமற்ற தாய்மைக்கு புகழ்சேர்த்து
எம்மை விட்டகன்று ஓராண்டாகியும்
பதிபதம் இணைந்து வாழ்வீர்களாக

அன்னாரின் திவச்கிரியைகள் இன்று (20.01.2020) திங்கட்கிழமை மானிப் பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நிகழவுள்ளதால் உற்றார், உறவினர், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் குறுக்குத்தெரு, இணுவில் வீதி, மானிப்பாய் **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து இரத்தினம்

(இளைப்பாறிய தபால் ஊழியர்)



பிறப்பு 05.01.1936 இறப்பு 18.01.2020

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இரத்தினம் கடந்த (18.01.2020) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை- செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் திலகவதியின் அன்புக்கணவரும் துஷ்யந்தி (சுவிஸ்), கேசவன் (லண்டன்), துஷ்யந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஷ்ணுகுமார், சுதர்சினி, ஜனார்த் தனி ஆகியோரின் மாமனாரும் வினுஷன், விதுஷா, லதுசன், பதுஷன், சகானா, அபினவா, ஆர்த்திகா, அட்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பாக்கியம், சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2020) செவ்வாய்க் கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வடக்கு வல்லை இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி மத்தி எல்லை ஒழுங்கை, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

தகவல்:குடும்பத்தினர் 077 086 9223, 077 008 4039

## மரண அறிவித்தல்கள்

# பொன்னையா நடராசா

**(Rtd. Superintendent of work- நகரசபை சாவகச்சேரி, மாநகரசபை யாழ்ப்பாணம்)**



**பிறப்பு 22.09.1931** **இறப்பு 17.01.2020**

மீசாலையை பிறப்பிடமாகவும் டச்சுறோட், சாவகச்சேரியை (அரசடி, சங்கத்தானை) வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா கடந்த (17.01.2020) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னையா விசாலாட்சி தம்பதிகளின் மகனும் சங்கரப் பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிக ளின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் Dr.விஜிதா (M.B.B.S, M.R.C.S-Eng) கிருபாஜினி (கணக்காளர் - அவுஸ் திரேலியா). கிரிதரன் (ஆசிரியர் - ஒஸ்மானியாக்கல்லூரி) ஆகியோரின் தந்தையும் ஸ்ரீகுமரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா). பிரதா(அதிபர் - யா/ கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் பிரமோ தயன் (அவுஸ்திரேலியா). தாரணி (அவுஸ்திரேலியா). வரோதயன் (அவுஸ்தி ரேலியா). லதாங்கி. தருணிகா ஆகியோரின் பேரனும். காலஞ்சென்ற விநாயக மூர்த்தி (ஆசிரியர்), காலஞ்சென்ற (தெய்வானைப்பிள்ளை - ஆசிரியர்) மற்றும் மகாலிங்கம் (கணக்காளர்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தி.மீனாட்சிப் பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை - இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி. அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற Dr.ச.அம்பிகைபாகன் (கடவுள் ஐயா - முன்னாள் பொறுப்பதிகாரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி, மாவட்ட வைத் தியசாலை - பளை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வே.திருஞானசம்பந்தர் (ஓய்வுபெற்ற புகையிரத கட்டுப்பாட்டு அதிகாரி -அனுராதபுரம் - அவுஸ்திரேலியா) அவர்களின் அன்புச்சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2020) திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**1 ஆம் கட்டை, டச்சு வீதி, சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 265 1054, 077 770 8616**

## மரண அறிவித்தல்கள்

**தோற்றம்** 06 ... 05 ... 1923



**மறைவு** 19 ... 01 ... 2020

# திருமதி அழகம்மா சின்னையா

ஏழாலை வடக்கு, ஏழாலையை பிறப்பிடமாகவும் விழிசிட்டி ஏழாலை தெற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா சின்னையா நேற்று **(19.01.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் தையிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சின்னையாவின் (ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சி.முத்துப்பிள்ளை (மலேசியா), க.கணபதிப்பிள்ளை (சட்டத் தரணியும், பிரசித்த நொத்தாரிசும்), வை.தெய்வானை மற்றும் க.ஆறுப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி.க.சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவீந்திரனின் (சுவிஸ்) அன்புத் தாயாரும் பத்மாவதியின் அன்பு மாமியாரும் பிரவீன், பிரசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(21.01.2020)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **11** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- சி.ரவீந்திரன் (மகன்)**
TP.No:- **021 205 9488**

**தோற்றம்** 30 . 10 . 1962



**மறைவு** 15 . 01 . 2020

# இராசரத்தினம் இராமேஸ்வரன்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை (Norway) வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இராமேஸ்வரன் (15-01-2020) புதன்கிழமை மாலை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஜெயகௌரியின் அன்புக் கணவனும் அட்லைஷ, இரட்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும். இராமுப்பிள்ளை இராசரத்தினம் (இளைப்பாறிய தபால் அதிபர்) காலஞ்சென்ற பொன்னம்மா இராச ரத்தினம் தம்பதியரின் அன்புக்குரிய மூத்த புதல்வனும். காலஞ்சென்ற சிவசிதம்பரம் (இளைப் பாறிய அதிபர்) மற்றும் தெய்வநாயகி தம்பதியரின் மருமகனும். அமிர்தகலா (Australia), சசிகலா (London), நித்தியகலா (Switzerland), ஈஸ்வரன்(London) ஆகியோரின் அன்புச் சகோதரரும். ஞானரத்னம். அரவிந்தன். ஸ்ரீதர். சுதர்சினி. குகராஜா. உமாதேவகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரிக்கா. தர்ஷிக்கா கிரிஷ்வினி. செந்தூரன் யசோவதனா ஆகியோரின் அன்பு மாமாவும் தானிகா சனோஜன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும். காலஞ்சென்ற யாழ் மாவட்ட கட்டட நிர்மாணி அம்பலம் முருகேசம்பிள்ளையின் அன்பு மருமகனும். காலஞ்சென்றவர்களான பண்டிதர் இராமுப்பிள்ளை இராசலிங்கம், சைவப்புலவர் பண்டிதர் வித்துவான் இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு வடமாநில. கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் ஆகியோரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இணுவில் கிழக்கில் அவரின் பிறந்த இல்லமான கலாபவனத்தில் இன்று (20-01-2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"கலாபவனம்"**
**இணுவில் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(IN/12354)(13.17)

**0772492306, 0767509549. 0755088371**

**மண்மகிழ** 02 . 01 . 1938



**கண்நெகிழ** 18 . 01 . 2020

# திருமதி தனபாக்கியம் கணேசஐயா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும். இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் கணேசஐயா 18.01.2020 சனிக்கிழமை அதிகாலை 4.25 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சரஸ்வதி தம்பதிகளின் மகளும். காலஞ்சென்ற-வர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் மருமகளும். காலஞ் சென்றவர்களான கணேச மூர்த்தி. கணேசஐயா ஆகியோரின் மனைவியும். காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி. தர்மபூபதி மற்றும் அருணநாயகி. இராதாநாயகி. காலஞ்சென்றவர்களான தர்மஞானசிங்கம்.வரதன். சச்சிதானந்தம் மற்றும் சதானந்தசிவம். நந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற துர்வாகரன் (மதி). ஸ்ரீரஞ்சனா. கமலேஸ்வரி (கமலா). கமலேஸ்வரன் (கண்ணன்). சசிகலா (சசி). தயாபரன் (பிரான்ஸ்). கனகலிங்கம். காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி. மகேஸ்வரி. ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும். காலஞ்சென்றவர்களான செந்தினி. பேரின்பநாதன் மற்றும் கமலதாஸ் ( அசோக்). சர்வகுமாரி. புஸ்பராஜ் (கண்ணன் - மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை பணியாளர்). சிவாஜினி (கவி). பவளம். கருணாகரஐயர். காலஞ்சென்ற திருட்செல்வம். மற்றும் கிருஸ்ணகுமாரி (வசந்தி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2020 புதன்கிழமை காலை 9 மணியளவில் உடுவில் புளியடி வைரவர் கோயிலடியில் உள்ள மகன் கண்ணனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக் காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியடி வைரவர் வீதி,**
**உடுவில்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(IN/12355)(11,17)

**077 949 4602**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30.10.1947

மறைவு
11.02.2018

## திருமதி சறோஜா ஈஸ்வரதாசன்

**திதி: 20.01.2020**

ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆற முடியவில்லை "அம்மா"
இப் புவியில் உமையிழந்து
நெடுதுயரால் நவிக்கின்றோம்.
ஈடு, இணையில்லை "அம்மா" இற்றைவரை
ஆறுதலாய் ஏதுமில்லை "அம்மா"

180/2, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

பிரிவால் வாடும்
அன்புக் கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(cs30651)(13.17)

# பதின்நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
09 . 04 . 1940

சிவன் அடியில்
25 . 01 . 2006

அமரர்

## விநாசித்தம்பி சோமசுந்தரம்

(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் - ஸ்தாபகர், சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

திதி : அபரபக்க ஏகாதசி (20.01.2020)

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன் வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D.1/1, சென்றல் றோட்,
கொழும்பு - 12,
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அருட்சகோதரி
## மேரி செலஸ்ரினா றபாயல் தி.கு



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் ஊறணி காங்கேசன்துறையை வதிவிடமாகவும் கொண்ட யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி செலஸ்ரினா றபாயல் நேற்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிப்பயணத் திருப்பலி நாளை (21.01.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

## *18 கிலோ ...*

ளத்தினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலைய டுத்து. உதவி ஆணையாளர் பிரபாத் ஜெயவிக்கிரமவின் வழிநடத்தலில், மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி பி.இராமநாதன், சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியசாந்த ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் தேடுதல் நடைபெற்றது.

குழுவினர் மருதங்கேணியில் மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்லப்பட்ட கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றினர். அவற்றைக் கொண்டு சென்ற நபரையும் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன், சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(க-9,26)

### நாஹா மருத்துவ நிலையம்

விறைப்பு கொண்ட கை.கால் செயலிழப்பு.
பாரிசவாதம், முழங்கால் அதிக பாதிப்பு.
மூட்டுவாதம், தீராதபுண்கள், சொறி.
மாதவிடாய்சார் பிரச்சினை - அதிரடி மருந்தியல்

**077 321 2740**

வங்கி முன்னேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீதி)
மானிப்பாய்.

(CS 30703(04.17))

### வேலையாள்கள் தேவை

குப்பிளானில் இயங்கும் சாப்பாட்டுக் கடைக்கு சமையல் ஆள், சப்பிளையர்கள் தேவை.

**077 436 8218, 077 897 3778**

### வேலையாள் தேவை

Kaithady யில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வ்கனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு வேலையாள் தேவை.
(கைதடி, நாவற்குழி, நுணாவில், சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்தவர் விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு:
**K.S.Ponnampalam and son**
**Kaithady 021 223 1580/ 81**

### விடுதிக் காப்பாளர் தேவை

திருக்கேதீச்சரத்தில் அமைந்துள்ள
**சிவனருள் சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கு சேவையாற்றக்கூடிய விடுதிக்காப்பாளர் (ஆண்/ பெண்)**
**இருபாலாரும்** தேவை. விரும்பியோர் 31.01.2020 முன் விண்ணப்பிக்கலாம்.
நேரிலும் வருகை தந்து தொடர்புகொள்ளலாம்.
தொடர்புக்குரிய தொலைபேசி எண்

**077 581 5998**
**Sivan Arul Illam Trust**

### பெயர்மாற்றம்

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **மாணிக்கம் தங்கமலர்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **மாணிக்கம் தங்கராணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மாணிக்கம் தங்கராணி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதிப் படுத்துகின்றேன்.

**மாணிக்கம் தங்கராணி**

(CS/30702)(11.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**20.01.2020**



திருமதி
## பரிபூரணம் இரத்தினசிங்கம்

(ஓய்வு பெற்ற நெசவாசிரியர்)

எம்மை விட்டுச் சென்று
ஓராண்டாகினும்
அம்மா
உங்கள்
நினைவுகள்
எம் நெஞ்சினில்
என்றுமே நிலைத்திருக்கும்.

"கோபாலன் குடிசை"
03, வைமன் வீதி,
நல்லூர்.


குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம், கிளிநொச்சி

- கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.
- விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படுகின்றது.
- பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குனர்கள் இதற்கான கேள்வி ஆவணங்களை 20.01.2020 ஆம் திகதியிலிருந்து 09.02.2020 ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நாள்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத தொகையாக குறிப்பிடப்பட்ட தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். (மேலதிக தகவல்களுக்கு தொ.இல. 0212285663. தொலை நகல் இல. 0212283966)
- விண்ணப்பங்கள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு 10.02.2020 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக்கிளையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விதாரர்கள் கேள்வியின் இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் (KN/EB/...). உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
- கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும் என்பதோடு பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
- கேள்வி திறத்தலுக்கு முன்னரான தெளிபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 31.01.2020 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்

| S. No | கேள்வி இலக்கம் | விபரம் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணைப்பணம் மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத பணம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/Do3/Cl.ser/1 | சுத்திகரிப்பு சேவை | 1வருடம் | ரூபா 40,000.00<br>06.06.2020 | 1000.00 |
| 2 | KN/EB/Do3/Se.ser/2 | பாதுகாப்பு சேவை | 1வருடம் | ரூபா 40,000.00<br>06.06.2020 | 1000.00 |
| 3 | KN/EB/Do3/Ve.ser/3 | வாகன சுத்திகரிப்பு சேவை | 1 வருடம் | ரூபா 25,000.00<br>06.06.2020 | 1000.00 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்**
**கிளிநொச்சி மாவட்டம்**




## மூவினத்தவரும்...

யுள்ளனர். சிங்களத்தில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படும் என்ற அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இவ்வாறு தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் போது சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும் என்று பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அறிவித்திருந்தார். இதற்கு உள்நாட்டில் இருந்து மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த விவகாரம் சர்ச்சையானதையடுத்து, அப்படியொரு முடிவெடுக்க வில்லையென அமைச்சர்கள் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். எனினும், தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்படுமென யாருமே தெரிவிக்கவில்லை. அண்மையில் ஊடகங்களின் பிரதான ஆசிரியர்களைச் சந்தித்தபோது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், அப்படியொரு முடிவெடுக்கவில்லையென்றுதான் தெரிவித்தாரே தவிர, தமிழிலும் தேசிய கீதம் பாடப்படுமென தெரிவிக்கவில்லை.

இந்த நிலையிலேயே மூவினத்தவரும் இணைந்து தமிழில் தேசிய கீதம் பாடியுள்ளனர். (ஒ:5)

# அறிவித்தல்

**பொது மக்களின் கவனத்திற்கு விடுக்கப்படும் தகவல்**



திரு. வீ. பிரசாத்
உதவி முகாமையாளர்
தே.அ.அ இல: 802910339V

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஊழியர், தற்போது எம்முடன் பணியாற்றுவதில்லை. அவர் தற்போது சேவையில் இருந்து விலகியுள்ளார். இந்த விடயம் பற்றி பொது மக்கள் மற்றும் எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றோம். எனவே, இதன் பின்னர் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பாக மாட்டாது.

CERTIS LANKA GROUP

certis lanka
Securing Your World



எல்.ஏ.றுக்சி வினோதா
இரண்டாம் வருட மாணவி
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாணப் பல்கலை

# யாழ்ப்பாண பொதுசன நூலகத்தால் மாணவர் சமூகம் அடையும் நன்மை



யாழ். பொதுசன நூலகத்தின் ஆரம்ப வரலாற்றைப் பார்த்தோமானால் இதற்கான ஆரம்பம் மு.ஆ.செல்லப்பா எனும் ஆர்வலர் ஒருவரால் உருவாக்கப்பட்டமை தெரிய வரும். கார்த்திகை மாதம் 11ஆம் திகதி 1933ஆம் ஆண்டில் தனது வீட்டில் சில நூல்களுடன் இவர் நடத்தி வந்த நூல் நிலையமே இது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவு படுத்தும் நோக்கில் செல்லப்பாவும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து இந்த நூல் நிலையத்தை யாழ் . நகரத்தின் மத்தியில் அமைத்தார்கள். இக்காலத்தில் சில நூறு நூல்களே அங்கிருந்தன.

1981ஆம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்ட பின்னர் அதனைப் புனரமைப்புச் செய்து நூலக சேவை அந்த ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. எனினும் தொடர்ந்து நடந்த போரால் நூலகத்துக்கும் நூற்சேர்க்கைற்கும் மீண்டும் மீண்டும் அழிவு ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு சேர்க்கப்படும் நூல்களைப் பாதுகாப்பதற்காகவும் வாசகர் நூலக சேவையை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் நகரத்தின் பல பகுதிகளில் கிளை நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

சிறுவர்களுடைய வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் அறிவுத்திறனை வளர்ப்பதற்கும் சிறுவர் பகுதி துணை செய்கிறது. ஆங்கில, தமிழ் நூல்களைக் கொண்டு இப்பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு சிறுவர்களுக்கான கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், பாடப்புத்தகங்கள், பல உருவங்களில் வடிவமைக்கப்பட்ட நூல்கள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இரவல் வழங்கும் பகுதி ஊடாக நூலகத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் நூல்களை எடுத்துச் சென்று வாசிப்பதற்கு ஏற்ற வசதிகள் இங்கு காணப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஏறத்தாழ 30 ஆயிரம் நூல்கள் பல் துறை சார்ந்து உள்வாங்கப்பட்டுள்ளன. இதில் சிறந்த நாவல்கள், சிறுகதைகள், மொழி பெயர்ப்பு நாவல்கள் உள்ளடங்குகின்றன. விசேட ஆவணப் பகுதியில் உள்ளூரில் வெளி வரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றின் பிரதிகள், விசேட மலர்கள், காலத்துக்கு காலம் வெளிவரும் சிறப்பிதழ்கள் எனப் பலவற்றைச் சேகரித்து ஆய்வுத் தேவைக்காகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அரச வெளியீடுகளும் இங்கு சேகரிக்கப்படுவதால் இவை யாவும் கால ஒழுங்கில் தொகுதிகளாக் கட்டப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

விசேட சேர்க்கைப் பிரிவு இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள், இலங்கை பற்றி வெளி நாடுகளில் வெளிவந்த பிரசுரங்கள் என்பன உள்ளிட்ட ஏறத்தாழ 9 ஆயிரம் நூல்களை கொண்ட ஒரு பகுதியாகக் காணப்படுகிறது. இவற்றை விட அமெரிக்கத் தூதுவராலயத்தால் வழங்கப்பட்ட 58 நுண் சுருள்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக கடந்த நூறு வருடங்களில் இலங்கையில் வெளிவந்த இந்து சாசனம், ஈழ நாடு, உதயதாரகை போன்ற இடை நிறுத்தப்பட்ட பத்திரிகைகளை வாசித்துப் பயன் பெற முடிகிறது.

உசாத்துணைப் பிரிவிலே 21 ஆயிரம் நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இங்கு இந்து சமயம், வரலாறு, புவியியல், சமூகவியல், மொழி, இலக்கியம் போன்றனவும் விசேட அறிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் நூல்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் இறுவட்டுக்களைப் பயன்படுத்தி படிப்பதற்கு கணினி வசதிகளும் உள்ளன.

# பல்கிப் பெருகி வருகின்ற சிறுவர் துஷ்பிரயோகம்!

அ.ரோகினி
ஊடகத்துறை
யாழ். பல்கலைக் கழகம்

உலகெங்கும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பரவலாக நடைபெறுவதை ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான விழிப்புணர்வுகள், சட்டங்கள், தண்டனைகள் பற்றிய தெளிவின்மை காரணமாக இவ்வாறான குற்றங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. சிறுவர் துஷ்பிரயோக சட்ட விழிப்பு ணர்வை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. இது சமூகம் சார்ந்த பொறுப்பாக இருக்கின்றது.

பதினெட்டு வயதிற்குட்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளும் சிறுவர்களாவர். பிள்ளை ஒன்றின் மீது பிரயோகிக்கப்படும் எல்லா வகையான துன்புறுத்தல்களும் சிறுவர் துஸ்பிரயோகமாகும். ஒரு சிறுவருக்கு நேரடியாகத் தீங்கு ஏற்படுத்தும் செயல்களும் அவற்றின் பயனாக அச்சிறுவரின் ஆரோக்கியத்தில், மேம்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களும் சிறுவர் துஸ்பிரயோகமாகும். சிறுவர் உழைப்பு, கொடுமைப்படுத்தல், பாலியல் வன்முறைகள், தீங்கினை விளைவித்தல் என்பன துஸ்பிரயோகத்திலடங்கும். மேலும் சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியத்திற்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலும் துஸ்பிரயோகமாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு துஸ்பிரயோகத்திற்கு உள்ளடக்கப்பட்ட பிள்ளைகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். வயது வந்தோர் மீது நம்பிக்கையிழப்பு, உணர்வுரீதியான பின்னடைவு, கற்றல் செயற்பாடுகளில் கவனம் செலுத்தாமை, கோபம், விரக்தி, உறவு ரீதியான நம்பிக்கையின்மை ஆகியன அவற்றில் சில.

சிறுவர்களுக்கு, உடலுக்குத் தீங்கு ஏற்படுத்தும் போது உடல்சார்ந்த துஸ்பிரயோகமாகக் கொள்ளப்படும். உடலில் எரிகாயங்கள், கடிகாயங்களை ஏற்படுத்தல், பிள்ளைகளைக் கைகளாலோ பிரம்பைக் கொண்டோ அடித்தல், காயத்தினை ஏற்படுத்தல் என்பன உடல் ரீதியான துன்புறுத்தல்களாகும். இவ்வாறான தீங்குகள் பற்றிப் பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது பெற்றோரின் கடப்பாடாகும்.

பாலியல் ரீதியான துஸ்பிரயோகமானது பிள்ளையின் படிமுறை வளர்ச்சியைப் பாதிக்கின்றது. வயது வந்தோரின் பிழையான செயற்பாடுகளினால் பிள்ளையானது சமூகப் பெறுமானங்களை இழக்கின்றது. வயது வந்தோர் சிலர் பிள்ளைகளை அச்சுறுத்தி போலி நட்பைக் காட்டி அன்பளிப்புக்களை வழங்கி இலகுவாகத் தமது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

இவ்வாறாக பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட பிள்ளையிடம் படுக்கையில் சிறுநீர் கழித்தல், நடத்தையில் திடீர் மாற்றம், உடற்பயிற்சி வேலைகளில்; பின்னடைவு, பயங்கரக் கனவு காணுதல் போன்ற அறிகுறிகள் தென்படும்.




உணர்வு ரீதியாகவும், சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். அதாவது வயது வந்தோர் பிள்ளையை சிறுமைப்படுத்தல், ஏளனம் செய்தல், மற்றைய பிள்ளைகளைக் காட்டி ஒப்பிட்டுப் பேசுதல், வேறுபடுத்திப் பேசுதல், பிள்ளையைத் திட்டுதல் என்பன பிள்ளைகளின் உணர்வைப் பாதிப்பதனால் அவை உணர்வு ரீதியான துஸ்பிரயோகமாகக் கொள்ளப்படுகின்றன. எனவே பெற்றோர் பிள்ளைகளைப் புறக்கணிக்காமல் பிள்ளையிடம் அன்பு, இரக்கம் காட்டுதல் வேண்டும்.

நகர்ப்புறங்களைக் காட்டிலும் கிராமப்புறங்களிலேயே கூடுதலான சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக அறியமுடிகின்றது. இவ்வாறு சிறுவர் துஸ்பிரயோகங்கள் அதிகரிப்பதன் காரணமாக சமூக நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோகம் மிகப்பெரியதொரு சவாலாக மாறியுள்ளதாகவும் இது சுகாதார சமூகப்பிரச்சினையாக மாற்றம் பெற்று வருவதாகவும் அறியப்பட்டுள்ளது.

சிறுவர் துஸ்பிரயோகத்தில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் இல்லாது போனால் எமது இளைய சந்ததியினரின் எதிர்காலம் பாழ்பட்டுப் போகும். சிறுவர் துஸ்பிரயோகம் குறித்து கிராமிய மட்டத்திலிருந்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலை மட்டத்தில் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு ஆலோசனைகளை வழங்கிச் சிறுவர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மிக முக்கியமான விடயம் தமது சிறுவர்களை வழிநடத்துவதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் வாலிபர்கள் ஒன்றுபட்டுத் திட்டங்களை வகுத்துச் செயற்பட முன்வர வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் எமது சிறுவர் சிறுமியர்களின் எதிர்காலத்தை நம்பிக்கை கொண்டதாக மாற்றியமைத்துக்கொள்ள முடியும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நக்குண்டாலும் நாவிழக்கோம்

கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் பல இடங்களுக்கும் குறிப்பாக அரச திணைக்களங்கள், மருத்துவமனைகள் என்பவற்றுக்கு திடீர் 'விசிட்' அடித்து அங்குள்ள குறைநிறைகளைக் கேட்டறிந்து வருகின்றார். கடந்தவாரம் கூட கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்திக்கும் வழிவகைகளையும் அதிகாரிகளிடம் உத்தரவிட்டுச் சென்றிருந்தார். இப்படியெல்லாம் அழையா விருந்தாளியாக , அதிரடியாக தங்கள் திணைக்களத்துக்கும் ஜனாதிபதி கோத்தாபய வந்திறங்கி விடக்கூடும் என்ற அச்சத்தில், தலைநகரில் உள்ள திணைக்களங்கள் வழக்கமான சோம்பலை உதறிவிட்டு, காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டதைப் போல செயற்கைச் சுறுசுறுப்போடு இயங்கத் தொடங்கியுள்ளன.

இவையெல்லாம் நல்ல விடயங்கள் தான். ஒரு நாட்டின் ஜனாதிபதி, வெறுமனே தன் அலுவலகத்துக்குள் குந்தியிருந்து , அதிகாரிகள் சொல்லும் தகவலை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்காமல் நேரடியாகக் களத்துக்குச் சென்று, அவதானித்தலின் ஊடாக யதார்த்ததை உணர்ந்து எடுக்கும் முடிவுகள் எப்போதும் காத்திரமானவை. இப்படி திணைக்களங்கள் சார்ந்த விடயங்களில் 'பறக்கும் படை' போல அதிரடியாகப் போய் வருகின்ற ஜனாதிபதி கோத்தாபய, வடக்கு மாகாணத்துக்கு வருவதற்கு மட்டும் நாள், கோள் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கோத்தாபய ஜனாதிபதியானவுடனேயே வடக்கு மாகாணத்துக்கு இந்த மாதம், செல்லப்போகின்றார் என பல முறை சொல்லப்பட்டிருந்தது. ஆனால் எப்போது போகப்போகின்றார் என்பது குறித்து ஜனாதிபதி செயலகம் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. அமைச்சர்களே அடிக்கொரு தடவை , ' தனக்கு வாக்களிக்காத தமிழ் மக்களையும் கோத்தாபய , ஏனைய மக்களைப் போலவே பார்க்கிறார். பிரிவினை காட்டவில்லை. அங்கு சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிய விரைவில் செல்வார் " என்று கூவிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கூவுபவர்களில் மஹிந்தானந்த அளுத்கமகே தான் முன்னணியில் இருக்கிறார். அவர்தான் அண்மைக்காலமாக ' தமிழர்களுக்குத் தீர்வு தேவையில்லை, சோறுதான் தேவை" என்று புலம்பிக் கொண்டிருப்பவர். அந்தப்புலம்பலின் ஒருபகுதியாகவே , கோத்தாபயவின் வடக்கு பயணம் குறித்த தன் ஆருடத்தை அடித்து விடுகின்றார்.

ஆனால் கோத்தாபயவின் எண்ணம் வேறாக இருக்கிறது.வடக்குக்கான தன்னுடைய வருகை பத்தொடு பதினொன்றாக இல்லாமல், காத்திரமான செய்தியைச் சொல்லக்கூடியதாக இருக்க வேண்டும் என நம்புகிறார் போலும். ஜனாதிபதி செயலகத் தகவல்களின் படி, காணாமல் போனோர் விவகாரம், காணி விடுவிப்பு, வேலைவாய்ப்பு, குடிநீர்ப்பிரச்சினை என்பன போன்ற விடயங்கள் தொடர்பில் முக்கிய அறிவிப்புக்களை இந்த வருகையின் போது ஜனாதிபதி கோத்தாபய வெளியிடுவார் என்று ஜனாதிபதி செயலக ஊடகப் பணிப்பாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை மெல்ல மெல்லத் தங்களை நோக்கி ஈர்க்க வைக்க, அவர்களுக்கு விருப்பமான தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்து ஆசையூட்டி, பின்னர் தங்கள் வலையில் வீழ்த்துபவர்கள் பற்றி நிறையக் கதைகள் உண்டு. கிட்டத்தட்ட அதேபாணியில் தமிழ் மக்களிடம் அவர்களுக்குத் தேவையான திட்டங்களைக் கொடுத்து தன் பக்கம் திருப்ப கோத்தாபய நினைக்கிறார். யார் குற்றினாலும் அரிசியானால் சரி என்ற நிலைப்பாட்டிலேயே தமிழ் மக்களும் வந்திருக்கிறார்கள். ஆனால் தனியே அபிவிருத்தியை மட்டும் தந்துவிட்டு, தமிழர்களை மடக்கலாம் எனக் கோத்தாபய நினைப்பாரானால் அதை விட மடத்தனம் வேறொன்றுமில்லை. கொடுப்பதையெல்லாம் தமிழர்கள் வாங்கினாலும், நக்குண்ட இடத்தில் அவர்கள் நாவிழப்பதில்லை என்பதே கடந்த கால வரலாறு சொல்லும் பாடம்.

# 2023வரை ஜி.எஸ்.பி. பிளஸ்

**கொழும்பு, ஜன.20**

**இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை 2023 வரை தொடரும் என்று கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**




அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் நாட்டின் ஆடை உற்பத்தி துறைக்கே அதிகளவான ஜி.எஸ்.பிபிளஸ்வரிச்சலுகை கிடைக்கின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை எதிர் வரும் 2023 ஆம் ஆண்டு வரை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது

ஆடை ஏற்றுமதியில் நூற்றுக்கு 60 சதவீதமான ஏற்றுமதி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகின்றது என்றும், இந்த நாட்டு மொத்த ஏற்றுமதியில் 43 சதவீதம் ஆடை ஏற்றுமதியாகப் பிரதிபலிக்கின்றது என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார். இதனால் 5 பில்லியன் அமெரிக்க டொலர்க வருடத்திற்கு வருமானமாக கிடைக்கின்றது என்றும் இதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பெற்றுக் கொடுக்கும் ஆதரவு தொடர்பில் அரசின் நன்றியை தெரிவித்தார். அதேபோல், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முதலீட்டாளர்கள் இந்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வத்துடன் உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதித் தலைவர் தெரிவித்துள்ளார். (எ)



# ஆலய மடத்திலிருந்து 3 சிறுவர்களும் மீட்பு

வடமராட்சி.ஜன.20

வடமராட்சிக் கிழக்கில் காணமல் போயிருந்த மூன்று சிறுவர்களும் நேற்றுக் காலை மீட்கப்பட்டனர்.

நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த 10 வயதுடைய இரண்டு சிறுவர்களும், 17 வயதுடைய சிறுவன் ஒருவருமாக மூன்று சிறுவர்கள் நேற்று முன்தினம் காணாமல் போயிருந்தனர். பல இடங்களிலும் தேடியும் அவர்களைக் காணவில்லை.

பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாரும், ஊர் மக்களும் இணைந்து பல இடங்களிலும் தேடுதல் நடத்தப்பட்டது.

காணாமல் போன சிறுவர்கள் மீட்கப்பட வில்லை. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பொன்று ஏற்பட்டிருந்தது. ஊர் மக்கள் தொடர்ந்தும் தேடிக் கொண்டிருந்த நிலையில் அங்கு ஆலயம் ஒன்றிலுள்ள மடத்தில் இருந்து சிறுவர்கள் மூவரும் நேற்றுக் காலை மீட்கப்பட்டனர். சிறுவர்கள் மூவரும் தூங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட னர்.

அதன்பின்னர் அங்கு வைத்து சிறுவர்கள் மூவரிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (கு-20,22,159)

# கட்சித் தலைமை சஜித்துக்கு

## தொகுதி அமைப்பாளர் கோரிக்கை

கொழும்பு, ஜன.20

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைக்கப் பெற வேண்டும். கட்சியாப்புக்கு முரணாகத் தீர்மானங்கள் எடுக்க முடியாது. கட்சியின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பலபிடிய தொகுதி அமைப்பாளர் அசோக தயவந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சவால்களை எதிர்க் கொள்வது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒன்றும் புதிய விடயமல்ல தற்போது தோன்றியுள்ள தலைமைத்துவப் பிரச்சினைகளுக்கு வரலாற்று அதாவது கட்சிக்குள் முன்பு இடம் பெற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வைப் பெற முடியும்.

காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களே குற்றப் பிரேரணை கொண்டு வந்தனர்.

இதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களான காமினி திஸாநாயக்க, லலித் எதுலத்முதலிய ஆகியோர் முன்னணி வகித்தார்கள். இந்த நெருக்கடியான நிலைமையில் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பொதுச் செயலாளர் சிறிசேன குரே ஆகியோர் பக்கபலமாக இருந்து குற்றப் பிரேரணையைத் தோற்கடித்தார்கள்.

இவ்வாறான நிலைமையே தற்போது ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்துக்குத் தோற்றம் பெற்றுள்ளது.

தலைமைத்துவம் குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து மாத்திரமே தீர்வு காண முடியும்.

பிளவுப்பட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது மாறாக எதிர் விளைவுகள் மாத்திரமே அனைவருக்கும் தோற்றம் பெறும்.

கட்சியின் மேல்தரப்பின் கருத்துகளுக்கு மாத்திரம் கட்சியின் தலைமைத்துவம் முக்கியத்துவம் கொடுக்க கூடாது. கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் உட்பட அனைவரது கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும்- என்றார். (எ)

# கால்கோள் விழாக்கள்





பூநகரி. மத்திய.கல்லூரியில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்துள்ள மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதிபர் வே.அரசகேசரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி அலுவலர் திருமதி ராஜசிறிதர்மேந்திரா கலந்து கொண்டார். (ஐ-9)





கிளிநொச்சி தருமபுரம் இல 01 அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ஐ-222)





கொடிகாமம்,ஜன.20

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி த.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிநிதியும் அழகியல்பாட உதவிக்கல்விப் பணிப்பாளருமான திருமதி விஜிதா ஆரியரட்ணவும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் சி.நாகராசா, ஓய்வு பெற்ற அதிபரும் நலன் விரும்பியுமான க.மயி ல்வாகனம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ






மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் கால்கோள் விழா அதிபர் வை.ஜெயகாந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் அ.நிமலரோகன், ஆசிரியர்கள் மாணவர்கள் ,பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-159)





கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா அதிபர் க.இளங்கோவன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ப்ல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன், சிறப்பு விருந்தினராக வரணி ஆசிரிய மத்திய நிலையத்தின் ஆசிரிய கல்வியியலாளர் தி.கிருஷ்ணதாஸ், தென்மராட்சி கல்வி வலய (வரலாறு) ஆசிரிய ஆலோசகர் சி.நாகராஜா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள். பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-159)







படங்கள்: சிவசாந்தன்

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த இளைஞர் பொங்கல் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை அடியவர்கள் மற்றும் ஊர்மக்களுடன் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. (க)

## கற்றாழை செய்கையை பரவலாக்க நடவடிக்கை

முல்லைத்தீவு,ஜன.20

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி கற்றாழைச் செய்கையை விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது "முதற்கட்டமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கற்றாழைச் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் பெண்கள் தொழில் முயற்சியாளர் சங்கத்தைச் சேர்ந்த போர்க் காலத்தில் பாதிக்கப்பட்ட பெண்விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 100 பெண் விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா கால் ஏக்கர் என்ற அடிப்படையில் நடுகைப் பொருள்களும் அதற்கான ஏனைய உதவிகளும் வழங்கப்பட்டு கற்றாழைச் செய்கை விஸ்தரிப்பு வேலைத்திட்டம் நடைபெற்றுவருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏனைய பிரதேச செயலகங்களிலும் இந்தக் கற்றாழைச் செய்கையை எதிர்வரும் காலங்களில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-19)

# 1000/= கொடுக்காவிடின் தோட்டத்தை தாருங்கள்



## மஹிந்தானந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.20**

**பெருந்தோட்ட நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்க முடியாவிட்டால் தோட்டங்களை அரசிடம் ஒப்படைக்கலாம் என்று இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

நாவலபிட்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பெருந்தோட்ட நிறுவனங்கள் கோரும் நிதியியை வழங்க அரசு தயாராக உள்ளது. ஜனாதிபதித் தேர்தலின்போது தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு வாக்களிக்கவில்லை. இருந்தாலும் பொறுப்புள்ள அரசு என்ற அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதியில் இருந்துவழங்கஅரசுதீர்மானித்துள்ளது.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு முடியுமாக இருந்தால் இருக்க முடியும் முடியாவிட்டால் தோட்டங்களை அரசிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லமுடியும்.

பெருந்தோட்ட நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க எம்மால் முடியும். வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. எதிர்வரும் பொதுத்தேர்தல் வரைக்கும் எம்க்கான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது முறையான வரவு -செலவு திட்டத்தை முன்வைத்து மக்களுக்கான சேவையை தொடர்ந்தும் நாம் முன்னெடுப்போம்- என்றார். (எ)




## வெள்ளத்தில் வெங்காயம்

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ். குடாநாட்டில் தற்போது பெய்து வரும் மழையால் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. .

வலி கிழக்குப் பிரதேசத்தில் கொட்டித் தீர்த்த மழையால், அங்கு பயிரிடப்பட்ட வெங்காயச் செய்கை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்களே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அநேகமான இடங்களில் சின்னவெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மழை தொடர்ந்து பெய்தால் வெங்காயச் செய்கை அழிவடையும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஒரு சில விவசாய நிலங்களில் ஏற்கனவே நடுகை செய்யப்பட்டு வெங்காயம் அறுவடை செய்யப்பட்டுள்ளது. அவை மழையில் நனைந்து அழுகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. தற்போது சின்ன வெங்காயத்துக்குக் குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது. (க-17)






கிளிநொச்சி கந்தன்குளம் செல்வாநகரில் அமைந்துள்ள "ஓம் சக்திவேல்" ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் அண்மையில் சிறப்புற நடைபெற்றது. (க-159)

## திரையிடலும் கலந்துரையாடலும்

குடத்தனை,ஜன.20

பசுமைச்சுவடுகள் அமைப்பின் சிறுவர்களுக்கான "திரையிடலும் கலந்துரையாடலும்" கடந்த வெள்ளிக்கிழமை குடத்தனை மேற்கு, வலிக்கண்டி முன்பள்ளிக் கட்டடத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் "ஐஸ் ஏஜ் 1 (ice age 1)திரைப்படம் திரையிடப்பட்டது. அதன் பின்னர் கலந்துரையாடல் நடைபெற்றது. (ஜ-222)



## 6,000 பட்டதாரிகளின் நியமனத்துக்கு குழு!

கொழும்பு, ஜன.20

அரச சேவைகளில் பயிற்சிகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட 6 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான தகுதிகளைப் பரீட்சிப்பதற்காக 10 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச சேவைகளில் இணைத்துக் கொள்வதற்காக இந்தப் பட்டதாரிகள் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் பயிற்சிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பட்டதாரிகளுக்குப் பல்வேறு அரச நிறுவனங்களின் முகாமைத்துவம், தொழில்நுட்பப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாரச்சி குறிப்பிட்டுள்ளார். (எ)

# தமிழ், முஸ்லிம் வாக்குகளை பெறுவது உறுதி!

திசாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன.20

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் இழந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குளைப் பொதுத் தேர்தலில் பெறுவதில் உறுதியாக இருக்கின்றோம் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களின் வாக்குகளையும் பெற்று வெற்றியடைந்து சிறந்த ஆட்சியை நடத்த விரும்புகின்றோம். இந்த முறை ஹங்குரன்கெடவில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும் என்பதே எனது எதிர்ப்பார்ப்பு - என்றார். (எ)



# "வெற்றி நிச்சயம்"

## மனோ நம்பிக்கை

கொழும்பு, ஜன.20

**எதிர்வரும் தேர்தலில் வெற்றிப் பெறக்கூடிய தலைவர் எம்மிடம் உள்ளார். நாம் நிச்சயம் வெற்றியடைவோம் என முன்னாள் அமைச்சர்மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

பொரளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. எமக்கு பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. நேரத்தை வீணடிக்க முடியாது. நாம் பெருமையடைகிறோம். எம்மிடம் வெற்றிப் பெறக்கூடிய ஒரு தலைவர் இருக்கிறார். இவரைக் கொண்டு நிச்சயமாக நாம் இந்தத் தேர்தலில் வெற்றியடைவோம் என்றார். அதேவேளை, அங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, "இங்குள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பலமான கூட்டணி ஒன்றை அமைத்து, அடுத்த பொதுத் தேர்தலில் களமிறங்கத் தீர்மானித்துள்ளோம். இந்தப் பொதுத் தேர்தலில் பலமான ஜனநாயகக் கூட்டணியொன்று உருவாகும். இந்தக் கூட்டணியின் தலைவராக நிச்சயமாக சஜித் பிரேமதாசதான் செயற்படுவார் - என்றார். (எ)

# வடமாகாண கல்வி வளர்ச்சிக்கு பங்காளிகளாவோம்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன்



யாழ்ப்பாணம் ஜன.20

கல்வி என்பது தனியே மாணவர்களை மையப்படுத்தியது அல்ல. இதில் அனைவருக்கும் பங்கு இருக்கின்றது. அந்த வகையில் இன்று அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடானது பாராட்டிற்கு உரியது மட்டுமன்றி எமது பிரதேசங்கள் அனைத்திலும் அவசியமாக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.எல்.இளங்கோவன்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார வசதிகுறைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக 2018 க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 2019ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்குக் கற்றலுக்கான உதவி வழங்கும் நிகழ்வும் அண்மையில் அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு.சு.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெற்றன. இந்த விழாவுக்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்;

வடக்கு மாகாணம் கற்றவர்களாலும் கற்று உயர்ந்தவர்களாலும் ஒரு காலத்தில் மேலோங்கியிருந்தது. அத்தகைய காலங்களில் பெற்றோர்களின் ஊக்கமும் சமூகத்தின் அக்கறையும் மிகையாக இருந்தன. இன்று அத்தகைய நிலை மாறியிருக்கின்றது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் அக்கறையும் சமூகத்தின் அக்கறையும் குறைவாகவே உள்ளது.

அரியாலை அபிவிருத்திச் சங்கம் வறுமைக்குட்பட்ட மாணவர்களின் கல்வியில் இவ்வளவு அக்கறையாக இருப்பது பெருமையாக உள்ளது. இத்தகைய நிலை அனைத்துக் கிராமங்களிலும் உருவாகுமாக இருந்தால் நாம் பழைய நிலைக்கு மீண்டுவிடுவோம்.

ஆகையால் வடக்கு மாகாணத்தின் கல்வியை மேம்படுத்த நாம் அனைவரிடம் இருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்- என்று தெரிவித்தார் இளங்கோவன். (ந)

# ஊடக மாணவர்களுக்கு மோஜோ பயிற்சி நெறி

கொழும்பு, ஜன.20

இலங்கையில் ஊடகக் துறையில் கற்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்கான 5 நாள் "மோஜோ" பயிற்சி நெறி கடந்த 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை நீர்கொழும்பில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் திருகோணமலைப் பல்கலைக் கழக வளாகம், சிறிஜெயவர்த்தனபுரப் பல்கலைக் கழகம் என்பவற்றில் மூன்றாம் வருடத்தில் மூன்றாம் வருட ஊடகக் கற்கையைப் பயிலும் சுமார் 25 மாணவர்கள் பங்குபற்றினர்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தால் வடிவமைக்கப்பட்ட "மீடியோ கோர்ப்ஸ்" புலமைப் பரிசில் திட்டத்தின் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் முரண்பாட்டு உணர்திறன் ஊடகவியல், பாலியல் உணர்திறன் ஊடகவியல், பொய்ச் செய்திகள், ஒளிப்பட அடிப்படை தகவல்கள், வீடியோ எடிட்டிங் போன்ற பயிற்சிகள் வழங் கப்பட்டன. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஜீன் மக்கென்ஸி, ஊடகவியல் என்பது ஒரு உற்சாகமான மற்றும் முக்கியமான தொழில்களில் ஒன்று.


இது உங்களைப் பல தளங்களுக்கு அழைத்துச் செல்லும். நீங்கள் எண்ணிடாத உலகத்தைப் பார்க்க அது உங்களுக்கு வழி வகுக்கும் என்று குறிப்பிட்டார். வளவாளர்களாக சட்டக் கற்கைகள்நெறிகளுக்கான தெற்காசிய நிலை யத்தின்பணிப்பாளர்வைத்திய கலாநிதி விஜயஜயதிலக மற்றும் ரி.எம்.ஜி.சந்திரசேகர, கே.சி.சாரங்க, மெஹமட் பய்ரூஸ், கபில ராமநாயக்கே, மொஹமது அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)




அண்மையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த மாணவன் கேதீஸின் தங்கையான தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவிக்கு யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பினைச் சேர்ந்த புவனேந்திரன் தர்மேந்திரன் அவர்களால் துவிச்சக்கரவண்டி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. (ந-222)



தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் கீழ் சேவையாற்றும் இராணுவத்தில் இணைக்கப்பட்ட தமிழ் இராணுவத்தினரையும், அவர்களின் குடும்பத்தினரையும், பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்தனர். (க)



யாழ்ப்பாணம் நவாலி வடக்கு அட்டகிரி சிவன் கோயிலில் அண்மையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கா.துரைச்சாமிக் குருக்கள் தலைமையில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெற்றது. (ந-50)

# ரயில் பயணச் சீட்டுக்கள் மார்ச் முதல் ஒன்லைனில்

கொழும்பு, ஜன.20

எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் ரயில் பயணச் சீட்டை இணையம் ஊடாக (ஒன்லைன்) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே திணைக்கள எத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனூடாக வெளிநாட்டில் உள்ள வர்களுக்கும் ரயில் பயணச் சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை, அனைத்து ரயில் நிலையங்களுக்கு அருகிலும் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்காக ரயில் பஸ் கூட்டுச் சேவை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அனைத்து ரயில் நிலையங்களுக்கு அருகாமையிலும் சுமார் 100 வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய வசதிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட இறுதிக்கு முன்னர் புதிதாக 9 ரயில் எஞ்சின்கள் கிடைக்க உள்ளன. இவை மலையக ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில், பழமை வாய்ந்த முறைக்கு அமைவாக, ரயில் ஒன்று தற்போது இரத்மலானை ரயில்வே தொழிற்சாலையில் செப்பனிடப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 3 மாத காலப்பகுதிக்குள் கொழும்பில் இருந்து பண்டாரவளை வரையில் இந்த ரயில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும். ரயில்வேத் திணைக்களம் ரயில்களின் தேவைக்கு ஏற்ற வகையில் திட்டங்களை வகுக்கும் எனவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)



# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம் ஜன.20

யாழ்ப்பாணம் விது நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான யூனியன் கல்லூரி மகாஜனா கல்லூரி மற்றும் கடந்த 2018 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெற்ற நடேஸ்வரா கல்லூரி மாணவர்கள் றவிது நம்பிக்கை நிதியத்தின் தலைவர் சசிகரன் தலைமையில் கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது வலி.வடக்குப் பிரதேச செயலர் சிவஸ்ரீ விருதுகளையும் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஊக்குவிப்புக் கொடுப்பனவையும் வழங்கி வைத்தனர். (ந)

# பெரும்பான்மை கோருவது அதிகாரத்தைக் காக்கவே!

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.20

**சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்து அரசைத் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் நோக்கில்தான் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



பொரளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எமக்கு வெற்றி பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. நாம் நிச்சயமாக இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவோம். ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பலமானதொரு கூட்டணியை நாம் அமைப்போம். இந்தக் கூட்டணியில் களமிறங்கி, மீண்டும் தேர்தலில் வெற்றியடைவோம். இதற்காக நாம் தயாராகி விட்டோம். புதிய நபர்களுடன் பயணத்தைத் தொடர வேண்டும் என்பது தான் எமது நோக்கமாகும். நாம் பதவிகளுக்காக என்றும் கவலையடைந்ததில்லை. பதவிகளைக் கொண்டு எம்மைப் பிரிக்கவும் முடியாது. நாம் என்றும் மக்கள் மத்தியில்தான் இருக்கிறோம். எமது எதிர்த்தரப்பிலுள்ள அமைச்சரொருவர் கூறுகிறார். தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவர்களுக்குத் தேவை என்று. நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர்களுக்கு வழங்கத் தயாராகவே இருக்கிறோம். அடுத்த வாரம் என்றாலும் நாம் தயார்.

ஏப்ரல், மே வரை இருக்க வேண்டிய தேவையில்லை. ஆனால், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அதைவிடுத்து, மக்களுக்கு வாக்குறுதி அளிக்காது, மக்களை முட்டாளாக்கும் வகையில், சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்ய அரசு முற்படுக்கொண்டிருக்கின்றது. இதற்குத்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இவர்கள் கோருகிறார்கள். இதுதான் இவர்களின் நோக்கமாகவும் காணப்படுகிறது - என்றார். (எ)



# வடிகால் துப்புரவுப் பணி ஆரம்பித்தது மாநகரசபை

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.நகரில் ஆரியகுளம் சந்தியில் இருந்து செல்லும் பிரதான வடிகாலைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் கனரக வாகனங்களின் உதவியுடன் வடிகாலைத் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனின் நெறிப்படுத்தலில் வேலைகள் மேற்பார்வையாளர் பூ.ஜெயராஜ் தலைமையில் 30க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வடிகாலைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வடிகால் துப்புரவுப் பணிகள் தொடர்ந்து ஒரு வாரகாலத்துக்கு நடைபெறும் என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்தியில் இருந்து வேம்படிச் சந்தி பின்னர் வேம்படிச் சந்தியில் இருந்து ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டு வீதி வரைக்குமான பிரதான வடிகால் துப்புரவு செய்யப்படும். வடிகாலில் தேங்கிக் கிடக்கும் கழிவு நீர் பம்பி மூலம் அகற்றப்பட்டுப் பின்னர் கழிவுகள் கனரக வாகனங்களின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில வருடங்களாக இந்த வடிகால் துப்புரவு செய்யப்படாமையால் கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன.

அதனைவிட மழை காலத்தில் வெள்ளம் வழிந்தோடுவதும் தடைப்பட்டுள்ளது. வடிகால் துப்புரவுப் பணிகளை மாநகரப் பொறியியலாளர் பிரதி முதல்வர் து.ஈசன், ஆணையாளர் த.ஜெயசீலன் மற்றும் மாநகர உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (க-17)

# சட்ட ஆலோசனை முகாம்





வவுனியா,ஜன.20

டிரான்ஸ் பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனத்தில் ஏற்பாட்டில் இலவச சட்ட ஆலோசனை முகாம் வவுனியா குருமன்காடு பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இலவச சட்ட ஆலோசனை முகாமில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. பயிற்சிப் பட்டறையின் வளவாளராக வினோதினி பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு தகவல் அறியும் சட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தினார். வழக்கறிஞர்களினூடாக இலவசமாக சட்ட ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. விசேடமாக காணிப்பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் தங்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடைந்தனர். இலவச சட்ட ஆலோசனை முகாமில் வடமாகாணத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (க-18)

# தன் 'கையை' நம்பி களமிறங்கும் சு.கட்சி



கொழும்பு, ஜன.20


**பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் முடிவைக் கொள்கையளவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்திருந்தாலும் வடக்கு, கிழக்கில் கைச் சின்னத்திலேயே போட்டியிடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவது என்று முடிவெடுக்கப்பட்டிருந்தாலும் அனைத்து மாவட்டங்களிலும் அதன்படி களமிறங்க வேண்டும் என்ற தேவையில்லை. பெரமுன கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 70 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுனவை விடச் சுதந்திரக் கட்சி அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து செயற்படுவோம் என்று தெரிவித்துள்ளார்.

பெரமுன கட்சியின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு வடக்கில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

அதனால் சுதந்திரக் கட்சி இது தொடர்பான மாற்றுத் திட்டங்களை ஆராய்கின்றது என்று கூறப்படுகின்றது. (ஏ)





## தமிழ் அரசுக் கட்சியின் பொங்கல் திருமலையில்

கொழும்பு, ஜன.20

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் திருகோணமலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொங்கல் விழா நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் ச.குகதாசன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொங்கல் பூஜை நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான க.துரைரெட்ணசிங்கம், எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் இம்மானுவல் ஆனோல்ட், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், திருகோணமலை நகர சபைத் தலைவர் நா.இராஜநாயகம், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் தவிசாளர் வைத்திய கலாநிதி ஜி.ஞானகுணாளன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் உள்ளிட்ட இந்து, கிறிஸ்தவ மதகுருமார், பொது மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஏ-22)

## வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜன.20

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து கச்சாய் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காகயாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்தில் வரணி குடமியனைச் சேர்ந்த 33 மற்றும் 20 வயதுடையவர்கள் என்று கூறப்படுகின்றது. (ஐ-9)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் ஜன.20

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அமரர் அ.துரைராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது பாரியார் திருமதி இராஜேஸ்வரி துரைராஜாவால் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்துக்கு 88 ஆயிரத்து 587 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கியிருந்தார். அன்பளிப்பு செய்யப்பட்ட பொருள்கள் பாடசாலை அதிபரினால் 77 மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ந)



## கிராமமட்ட வேலைத்திட்டங்கள்; மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், ஜன.20


மன்னார் மாவட்டத்தில் நடப்பாண்டில் மாவட்ட ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கும் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் ஏற்பாட்டில் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் தலைவர் பி.எஸ்.அன்ரன் தலைமையில் இடம்பெற்றது. ஒன்றுகூடலில் கிராம ரீதியாக இயங்கி வரும் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் நேசக்கரம் பிரஜைகள் குழு அங்கத்தவர்கள் ஊடாக 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட இருக்கின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டன. அத்துடன் கிராம மட்டத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான குறைபாடுகளை இனம் கண்டு, அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய பொதுக் கலந்துரையாடல் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், பள்ளிமுனை பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், நேசக்கரம் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்கள், வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் செயலாளர், மற்றும் மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அதிகாரி மேரி பிரியந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)

# தமிழ் மக்களை ஒடுக்க உதவுகின்றதா இந்தியா?

### ராமதாஸ் கேள்வி



கொழும்பு, ஜன.20

இலங்கை இராணுவம் பாதுகாப்பு கருவிகளை வாங்குவதற்கு இந்திய அரசு உதவ முன் வந்துள்ளதன் ஊடாக அங்குள்ள தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு உதவுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது

இலங்கை இராணுவத்துக்கு பாதுகாப்பு கருவிகளை வாங்க 50 மில்லியன் டொலர் நிதி வழங்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. இது ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல் ஆகும். இந்த நிதியை ஈழத்தமிழர்களை ஒடுக்குவதற்காக இலங்கை அரசு பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

ஈழத்தமிழர் நலன், தமிழக மீனவர்கள் பாதுகாப்பு தொடர்பாக இந்தியாவுக்கு அளித்த உறுதியை இலங்கை அரசு காப்பாற்றவில்லை. ஒன்றரை இலட்சம் ஈழத் தமிழர் படுகொலை குறித்த போர்க் குற்ற விசாரணைக்கும் இலங்கை ஒத்துழைக்கவில்லை. இத்தகைய சூழலில் இலங்கைக்கு பாதுகாப்பு கருவிகள் வாங்க இந்தியா உதவ வேண்டிய தேவை என்ன? ஈழத்தமிழர்கள் படுகொலை விவகாரத்தில் இலங்கை அரசு குற்றவாளி. அத்தகைய நாட்டுக்கு இந்தியா 50 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவது போர்க் குற்றத்திற்கான வெகுமதியாகவே அமையும். எனவே, இலங்கைக்கு இந்தியா எந்த உதவியும் வழங்கக் கூடாது- என்றார். (ஏ)

## மோ.சைக்கிள் மீது பொலிஸ் சூடு வாகனத்தில் சென்ற பிக்கு சாவு!


கொழும்பு, ஜன.20
பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தென்மாகாணத்தில் உள்ள ஹுங்கமவில் நடந்துள்ளது.
பொலிஸாரின் அறிவுறுத்தலை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அந்த வீதியில் வேறொரு வாகனத்தில் சென்ற பிக்கு சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் 21 வயதுடையவர் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ)



# வெள்ளை மணல் அகழ்வால் சதுப்பு நிலமாகும் கைவேலி

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.20
தொடர்ச்சியான மணல் அகழ்வால் புதுக்குடியிருப்பில் ஒரு பிரதேசம் சதுப்பு நிலமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பிரதே சத்தைச் சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



புதுக்குடியிருப்பு கைவேலி முதலாம் வட்டாரப் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான காணியிலும், அரச காணிகளிலுமே இவ்வாறு மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.
கட்டடப் பூச்சுக்குப் பயன்படுத்தப்படும் வெள்ளைமணலே இவ்வாறு அள்ளப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.
பிரதேசத்தை சதுப்பு நிலமாக்கி அங்குள்ள மரங்களை அழித்து இயற்கை வளங்களை இல்லாதொழித்து இவ்வாறு அள்ளப்படும் மணல் வெளி மாட்டங்களுக்கே கொண்டுசெல்லப்படுகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.
மணல் அகழ்வைத் தடுக்குமாறு அரச அதிகாரிகளைக் கோரியபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.
மணல் அகழ்வைத் தடுக்கக்கோரி, கிராம மக்கள் பிரதேச செயலகத்துக்கு முறைப்பாடு வழங்கியிருந்தனர்.
சம்பவ இடத்துக்கு விரைந்த அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் கிராம அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மணல் அகழப்படும் இடங்கள் தொடர்பில் பார்வையிட்டனர்.
அதன்பின்னரும் மணல் அகழ்வைத் தடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.
"கைவேலிப்பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இவ்வாறு இடம்பெறுமாக இருந்தால் காலப்போக்கில் அதனை அண்டிய பிரதேசங்கள் சதுப்பு நிலமாக மாறும், மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும், சாதாரண மழை பெய்தாலும் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேற நேரிடும்.
மணல் அகழ்வு காரணமாக கைவேலி கிராமத்தின் வீதிகள் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளன.
பாடசாலை மாணவர்கள் மழை நேரத்தில் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது" என்று மக்கள் கவலை வெளியிட்டனர்.
மணல் அகழ்வைத் தடுக்க நடவடிக்கை எடுக்கக்கோரி கைவேலி கிராம அலுவலகர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தனர். (ஐ-19)

# நிர்வாகத் தெரிவு



மன்னார், ஜன.20
மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.
35 வருடங்களாக இயங்கி வரும் இச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.
தலைவராக அருட்பணி ரி. நவரட்ணம் அடிகளாரும், உப தலைவர்களாக நான்கு மதங்களிலிருந்தும் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன், எம்.சீ.எம்.ரம்சீன், வண. விமலரட்ண தேரர், அருட்பணி எஸ்.மார்க்கஸ் அடிகளார் ஆகியோரும், உப செயலாளராக எஸ்.ஏ.பெர்னாண்டோ, பொருளாளராக தோமாஸ் மரியதாஸ், உப பொருளாளராக யூட் பிகிராடோ ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.
நிர்வாக உறுப்பினர்களாக ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களில் முசலி பிரதேச செயலகப் பிரிவில் ஏ. இருதயரா குரூஸ், எஸ். ரகுமான், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் திருமதி பெப்பி லெம்பேட், ஏ.ரஞ்சன், மாந்தை மேற்கு பகுதியிலிருந்து மரியதாஸ், தங்கராஜா ஆகியோரும், மடுப்பிரிவிலிருந்து எஸ்.கனகசுந்தரம், ஏ.சூசைப்பிள்ளை, மன்னார்நகர் பிரதேசசெயலகப்பிரிவிலிருந்து அன்ரன் பிகிராடோ, வீ. அருள்சீலன் டயஸ் மற்றும் பொது உறுப்பினர்களாக செல்விகள் எஸ்.ஏ.ராஜேஸ்வரி, ஏ.சாந்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-60)

# 210 லீற்றர் கோடா மீட்பு

சாவகச்சேரி, ஜன.20
கஞ்சா கடத்தலைக் கண்டுபிடிக்கச் சென்ற மதுவரித் திணைக்களத்தினர், கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.
இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.



கஞ்சா கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து. அங்கு மதுவரி நிலைய- உத்தியோகத்தர்கள் சோதனை மேற்கொண்டனர்.
அவர்களைக் கண்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் தப்பியோடியுள்ளார்.
அங்கிருந்து 210 லீற்றர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவையும், உற்பத்தி செய்யப்பட்ட 4 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பையும், உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் அவர்கள் கைப்பற்றினர். (க-9)

# சுற்றுலாத் தளமாக மாறும் திருமலை துறைமுகப் பகுதி

கொழும்பு, ஜன.20
திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய பகுதியை தொழிற்பேட்டை மற்றும் சுற்றுலா வலயமாக மாற்றுவது குறித்து ஆராயச் சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.
அதற்குத் தகுந்த திட்டங்களை வகுப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பது, இந்தக் குழுவின் முக்கிய பொறுப்பாகும் என துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு தெரிவித்துள்ளது.
திருகோணமலைத் துறைமுகத்தை அண்மித்த பகுதி சுற்றுலாத்தளமாக மாற்றப்படும் என்று அமைச்சின் செயலாளர் ஜெ.எம்.பி.கே. மாயாதுன்னே குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஜோன்ஸ்ட்ன் பெர்னாண்டோ நேற்று திருகோணமலைத் துறைமுகத்துக்குச் சென்றிருந்தார்.'
திருகோணமலை துறைமுகத்தை தனியார் துறையினருக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் உள்ளதா என ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பினர். அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கடந்த அரச ஹம்பாந்தோட்டையை வழங்கியதைப் போன்று தனியாருக்கு நாங்கள் வழங்கப்போவதில்லை. அது தேசிய குற்றமாகும். அவ்வாறு செய்தவர்களுக்கு சாபம் கிடைக்கும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழுள்ள இந்த அரசு நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்யும் அரசல்ல, சொத்துக்களைக் காப்பாற்றுவதற்கு வந்த அரசாங்கமிது. ஐக்கிய தேசியக் கட்சியின் நல்லாட்சியிலேயே தனியாருக்கு வழங்கப்படவிருந்தது. என்றார். (ஏ)

# சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் முறைகேடு

முல்லைத்தீவு,ஜன.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுகாதார உதவியாளர்கள் தரம் 111க்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டர்களாகச் சேவை செய்து வந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்காத நிலையில், அவர்களின் விபரங்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இந்த விபரம் கடந்த 2015 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டும் இதுவரை நியமனங்கள் வழங்காத நிலையில் கடந்த16 ஆம்திகதி45 பேரைத்தெரிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 200 வரையான சுகாதார தொண்டர்கள் நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டராகப் பணியாற்றி வந்தும், இதுவரை நியமனம் கிடைக்காத நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு இரண்டு தடவைகள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நியமனம் கிடைக்காதவர்கள் மீள்பரிசீலனைப் படிவங்களை நிரப்பி, முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொண்ட போதும் இதுவரை 45 பெயரின் பெயர் விபரங்களே அறிவிக்கப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதிதாக வடக்கு மாகாணத்தைப் பொறுப்பேற்றுள்ள வடமாகாணா ஆளுநர் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டமான முல்லைத்தீவு மாவட்டத்தைக் கருத்தில் கொண்டு மாவட்டத்தில் நீண்டகாலமாகச் சேவை செய்து வரும் சுகாதாரத் தொண்டர்களின் நியமனத்தை விரைவு படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-19)

# பொங்கல் விழா

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தமிழ்தேசிய பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு பட்டிப்பளை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மண்முனை தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபாவான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பாரம்பரிய கலை நிகழ்வுகளும்,தமிழ்மக்களின் தேவை குறித்தான பட்டிமன்றமும் நடைபெற்றன. (ஐ)



****

கொடிகாமம்,ஜன.20

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் பொங்கல் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் நடைபெற்றநிகழ்வில், பிரதம விருந்தினராக கைதடிநுணாவில்அ.த.க.பாடசாலைஅதிபர்ஆ.தங்கவேலு, சிறப்புவிருந்தினராக பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் கு. லெனின்குமார், ஆசிரிய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் விருந்தினர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (சு-159)



# 44 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

மன்னார்,ஜன.20

பொருளாதார நிலையில் பின் தங்கிய மாணவர்கள் 44 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.


முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்டச்சி, காயா நகர், கரடிக்குளி ,மறிச்சுக்கட்டி ,காயாக்குலி, ஹீனைஸ் நகர் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஹீனைஸ் பாரூக் அரசினர் முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

ரோயல் கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் ஹேயார் அமைப்பின் நிதி ஒதுக்கீட்டில் வை.எம்.எம்.ஏ. முசலி தெற்கு அமைப்பின் அனுசரணையுடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் ரோயல் கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹீனைஸ் பாரூக் ஆகியோர் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை மாணவர்களிடம் கையளித்தனர். (ஐ-56)





அளவெட்டிமுற்போக்கு வாலிபர்சனசமூகநிலையமும் டயானாவிளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்திய பொங்கல்விழா நிகழ்வுகள். (நு-36)

## குழு மோதல் 34 பேர் கைது

கதிர்காமம் - செல்லக் கதிர்காமம் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்றமோதல்தொடர்பில்34பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மது போதையுடன் அந்தப பகுதி மக்களுடன் மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# திணைக்களப் பிரதிநிதிகளை சந்தித்தார் வடக்கு ஆளுநர்



யாழ்ப்பாணம்,ஜன.20

வடக்கு மாகாண ஆளுநர் திருமதிபி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண திணைக்களத்தின் பிரதிநிதிகள் சிலரை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் திணைக்களங்கள், வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைதிணைக்களம், வடக்கு மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான திணைக்கள ங்களங்கள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதி நிதிகளைச் சந்தித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

திணைக்களங்கள் முகம்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள், முன்னெடுத்துவரும் செயற்றிட்டங்கள் தொடர்பில் பிரதிநிதிகளால், வடக்கு மாகாண ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

"தமக்கான பற்றாக்குறைகள், பிரச்சினைகள் பற்றியே இனி பேசிக் கொண்டிருப்பதை விட, இருப்பதைப்ட பயன்படுத்திமக்களுக்குச் செய்ய வேண்டியவற்றைப் பற்றிச் சிந்திப்பதுடன் சமூக அக்கறை மேம்படுத்தப்பட வேண்டும். சுயமாக நம்மை

நாமே முன்னேற்ற வேண்டும்.

எங்களால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்காமல் எப்பொழுதும் மற்றவர்கள்மீது பழி போடுவதிலே காலம் கழிகிறது. இந்த நிலை தொடராமல், இனம்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தீர்வை விரைவாக இனம் கண்டு, மக்களுக்கு உதவ அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என ஆளுநர் திணைக்களப் பிரதிநிதி களிடம் கேட்டுக் கொண்டார். (க)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச மாற்று வலுவுடையோர் அமைப்பின் ஊடாக, உதயநகர் கிழக்கைச் சேர்ந்த ரவி என்பவரால் ஒரு தொகை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், மதிய உணவும் ஆனந்தபுரம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து கடந்த வாரம் வழங்கப்பட்டன. (க)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நவாலி அட்டகிரி சிவன் ஆலயத்தில், பிரதம குரு சிவத்திரு கா.துரைச்சாமி குருக்கள் தலைமையில் திருவாதிரை தேர் உற்சவம் அண்மையில் நடைபெற்றது. (க-50)

# 7க்கு முன்னுரிமை

## கோத்தாபய பணிப்புரை



கொழும்பு, ஜன.20

*ஏழு முக்கிய விடயங்களுக்கு மாகாண சபைகள் முன்னுரிமை வழங்க வேண்டும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக பணிப்புரை விடுத்துள்ளார்.*

இது குறித்த விரிவான பணிப்புரைகள் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவுக்கு விடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள், வாராந்தர சந்தை, பொது பேருந்து நிலையங்கள், வீதி சுத்திகரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கழிவு பொருள் முகாமைத்துவம் என்பன சிறந்த முறையில் தொழிற்படுவது தொடர்பாக முன்னுரிமை முறையில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்எனகுறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களுக்கு ஜனவரி முதல் மார்ச் மாத காலப்பகுதியினுள் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனபணிப்புரைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஏழு விடயங்களின் மேம்பாடு குறித்த நடவடிக்கைகள் உடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விடயங்களும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியின் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## “எங்கட புத்தகங்கள்” கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்,ஜன.20

‘எங்கட புத்தகங்கள்’ எனும் தலைப்பில் கண்காட்சியும், விற்பனையும் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 24, 25, 26 ஆகிய மூன்று தினங்கள் நடைபெறவுள்ள ‘சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2020’ இல் ‘எங்கட புத்தகங்கள்’ என்ற தலைப்பில் தேசத்து எழுத்தாளர்களின் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் நடைபெறவுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இந்தப் புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். நூற்றுக்கணக்கான நூல்களின் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட புத்தகப் பிரதிகள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக இலங்கை எழுத்தாளர்களினது புத்தகக் கண்காட்சி நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

பருத்தித்துறை நண்பர்கள் அமைப்பின் உதவியில், யாழ். வர்த்தக சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் இயற்கை வழி செயற்பாட்டாளராகிய குலசிங்கம் வசீகரன் இந்தப் புத்தகக் கண்காட்சிக்கான ஏற்பாடுகளில் முழுமையாகப் பங்கெடுத்துள்ளார்.

வாசகர்களும், எழுத்தாளர்களும் அதிக அளவிலான புத்தகப் பரிமாறல்களில் ஈடுபடுவதற்கான அரிய வாய்ப்பு இந்தக் கண்காட்சி மூலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எம்மவர்களின் புத்தகங்களைத் தேடிப் படிக்கவும், அவற்றைத் தம் வீட்டு நூலகங்களில் சேர்த்துப் பத்திரப்படுத்திக் கொள்வதற்கும் ஆர்வமுள்ளவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று இந்த நிகழ்வின் பிரதம ஏற்பாட்டாளராகிய குலசிங்கம் வசீகரன் தெரிவித்தார். இந்தக் கண்காட்சியில் இடம்பெறுகின்ற புத்தகங்களை வாசகர்களும், ஆர்வலர்களும் 10வீத விலைக் கழிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

நிகழ்வில் எழுத்தாளர்கள் பலரும் ஒன்றிணைகின்ற அதேவேளை, எழுத்தாளர்களும் வாசகர்களும் சங்கமிக்கின்ற ஒரு தருணமாகவும் இந்தக் கண்காட்சி அமைந்திருக்கும் என்றும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (க-110)

## உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள் இடைநீக்கம்

கொழும்பு, ஜன.20

ஒழுக்கத்தை மீறிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 20க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கட்சியின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் கட்சியின் தீர்மானங்களை மீறி, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஆதரவு தெரிவித்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒழுக்க விதிகளை மீறிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கட்சியின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு எதிர்வரும் முதலாம் மற்றும் 8 ஆம் திகதிகளில் மீண்டும் கூடவுள்ளது.

கட்சியின் தீர்மானங்களை மீறி வேறு கட்சிகளுடன் சேர்ந்த தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று குழு நேற்றுமுன்தினம் முற்பகல் கொழும்பு டாலி வீதியிலுள்ள தலைமையகத்தில் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## கச்சான் அறுவடை

கிளிநொச்சி,ஜன.20

முகமாலையில் கச்சான் அறுவடை விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. மாகாண விவசாயத் திணைகளத்தால் வழங்கப்பட்ட கைவிடப்பட்ட காணிகளில் உப உணவு பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல் என்ற திட்டத்தின் கீழ் முகமாலைத் தெற்குப் பகுதியில் விதைக்கப்பட்ட கச்சான் அறுவடை செய்யப்பட்டது.

மாகாண விவசாயத் திணைக்களத்தால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 6 லட்சம் ரூபா பெறுமதியிலான உப பயிர் உணவு பொருள்கள் 110 பேருக்கு வழங்கப்பட்டன. அங்கு பயிரிடப்பட்ட கச்சான் அறுவடை செய்யப்பட்டது.

நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பரமோதயன் ஜெயராணி, உதவி பிரதேச செயலாளர் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், விவசாய திணைக்கள ஊழியர்கள், பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-6)




## பொங்கலும் பரிசளிப்பும்

மன்னார்,ஜன.20

செம்மண்தீவு முத்துமாரியம்மன் அறநெறி பாடசாலையில் பொங்கல் விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுச் சிறப்புற நடைபெற்றன. மன்னார் இந்து கலாச்சார உத்தியோகத்தர் செல்வி ஜீவிதா ஆனந்தராசா தலைமையில் செம்மண்தீவு பலநோக்கு மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கலைநிகழ்வுகள், ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார், திருக்கேதீச்சர ஆலய நம்பிக்கை பொறுப்பாளர்களின் உபதலைவர் பிருந்தாவனநாதன், சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் டீா.நடேசானந்தன், சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தின் இணைத்தலைவர் சூரியகுமார், நானாட்டான் இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் க.ெடானேசன் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (க-213)



## யூஸ் உற்பத்தியாளருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம்,ஜன.20



உரிய சுகாதார விதிமுறைகளை பேணத் தவறிய யூஸ் உற்பத்தியாளருக்கு ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றால் 15 ஆயிரம் ரூபாதண்டம்விதிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்துறை நகர்ப் பகுதியில் அனுமதியற்ற விதத்தில் உரிய வெப்ப நிலையின்றி மூடிய வடி ரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 400 யூஸ் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டன.

ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார பரிசோதகர் இ.ஜெயகதாசன் மற்றும் காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம. ஜெயதீப் ஆகியோர் இணைந்து கைப்பற்றிய பைக்கற்றுக்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன. உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது , உரிமையாளர் மன்றில் சமூகம் அளிக்காத காரணத்தால் மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. மன்றால்பிறப்பிக்கப்பட்ட பிடியாணையின் பிரகாரம் , பொலிஸாரால் கைது செய்யப்பட்ட உரிமையாளர் கடந்த 16 ஆம் திகதி மன்றில் முற்படுத்தப்பட்டார். எதிராளி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மன்றால் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் அவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-37)

## செபஸ்தியார் ஆலய பெருந்திருவிழா

அளவெட்டி.ஜன.20

அளவெட்டி தெற்கு புனித செபஸ்தியார் ஆலயப் பெருந்திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6.30 மணிக்கு செபமாலை ஆராதனை பூசைகள் இடம் பெற்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித செபஸ்தியாரின் திருவுருவ பவனி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ-36)

# சிறுபான்மை ஆதரவின்றி ஆட்சியமைக்கும் முயற்சி

## ரிசாத் பதியுதீன் சுட்டிக்காட்டு



கொழும்பு. ஜன.20

சிறுபான்மை சமூகத்தின் ஆதரவின்றி அரசை உருவாக்கி, அதன்மூலம் சிறுபான்மை மக்களை மலினப்படுத்தும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எல்லோருக்கும் ஒரே சட்டம் என்ற புதிய கோஷத்துடன் காலாகாலமாக நமக்கிருக்கும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தை இல்லாமலாக்க, ரத்ன தேரர் நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். இவ்வாறான நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு முஸ்லிம் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படல் வேண்டும். பேரினவாதிகள் தாம் நினைத்தது போன்று நாடாளுமன்றத்தில் செயற்பட நாம் வழிவிடலாகாது. சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றி ஆட்சியமைக்க இடமளித்ததோமேயானால் அவர்களின் செயற்பாடுகள் கட்டுக்கடங்காது போய்விடும். இந்த யதார்த்தத்தை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்பாவி மக்களுக்கு இதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஏழ்மையையும் வறுமையையும் மூலதனமாகப் பயன்படுத்தி வாக்குகளைச் சிதைத்து சின்னாபின்னமாக்கும் செயற்பாடுகள் அரங்கேறியுள்ளன. நமது வாழ்வுரிமையையும் இருப்பையும் காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வடக்குக் கிழக்கில் உள்ள சமூகங்களுக்கிடையில் ஒரு உறவுப்பாலமாக பரிணாமம் எடுத்துள்ளது. அதேபோன்று, பேரினவாத சக்திகளுக்கு இந்தக் கட்சி சிம்மசொப்பனமாக இருப்பதனாலேயே கட்சித் தலைமை மீது அபாண்டங்களும் வீண்பழிச் சொற்களும் சுமத்தப்பட்டு வருகின்றன.- என்றார். (எ)

நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 25 04 1940

மறைவு 31 12 2019



திருமதி அமிர்தயோகம் முத்துக்குமாரசுவாமி

B.A,University of Peradeniya, Post. Graduate in Education open University

(இளைப்பாறிய அதிபர் - யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம், அளவெட்டி, வருகை விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை)

கடந்த 31.12.2019 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி அமிர்தயோகம் முத்துக்குமாரசுவாமி எம்மைப் பிரிந்த போது அவரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியவர்கள் நேரடியாகவும், மலர்வளையங்கள் மூலமாகவும் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்து எமது துயரில் பங்குபற்றியோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (20.01.2020) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் அவரது இல்லத்திலும், கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பன்னாலை வர்த்தலை கற்பக விநாயகர் திருமண மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

(CS/30704)(11,17)

குடும்பத்தினர்.

# பொங்கல் பொருட்கள் வழங்கி வைப்பு

வவுனியா ஜன.20

வவுனியா வர்த்தகர் சங்கத்தினரால் வசதியற்ற குடும்பங்களுக்குப் பொங்கல் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன. வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனையினால்வவுனியா வர்த்தகர் சங்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைவாக வர்த்தகர் சங்கத்தினால்வசதியற்ற30குடும்பங்களுக்கு அண்மையில் பொங்கல் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

வவுனியா வர்த்தகர் சங்கத்தலைவர் எஸ். சுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனைவைத்தியர்எஸ். லவன் வர்த்தகர் சங்கத்தின் போசகரும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினருமான செந்தில் நாதன் மயூரன் மற்றும் வர்த்தகர் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ந)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## VACANCY ANNOUCEMENTS

The HALO Trust is a non-political and non-religious registered British charity which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Kilinochchi and Jaffna.

HALO is seeking hard working candidates for a variety of vacancies as listed below. All applications must be submitted no later than Monday 27th January 2020. Only successful candidates will be contacted. For further information on any of the roles advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply, particularly female candidates for all roles, including the driver vacancy.

For the Finance Assistant, Database and GIS Officer, and Interpreter vacancies, interested candidates should submit their bio-data, contact details, CV, and a brief summary of their experience **(in English)** to: vanni@halosrilanka.org or to The HALO Trust, 450 Thirunagar West Road, Kilinochchi. Those applying for the driver vacancy should submit only their bio-data and contact details (in Tamil or English).

### 1. FINANCE ASSISTANT

The Finance Assistant will support the Jaffna-based Finance Manager and Finance Officer with the preparation of payment vouchers, preparing documentation for new staff (completing B cards and contracts), completing EPF and ETF forms, conducting store checks in Kilinochchi twice a week and other tasks as specified.

**Essential:** valid driving license, fluency in English, excellent working knowledge of Microsoft Office (especially Excel). **Desirable:** 1-2 years in a similar role, a qualification in mathematics.

### 2. DATABASE & GIS OFFICER

The Database and GIS Officer will work with MS Access and will assist with database maintenance, development, and reporting and will contribute to HALO's information management and mapping activities (ArcGIS). He/she will also work with PostgreSQL database associated with the national IMSMA mine action database and support the National Mine Action Center (NMAC) with data quality, query development and reporting.

Essential: fluency in English, 5+ years database administrator/developer experience required, advanced experience with software (MS Access, SQL, PostgreSQL/PostGIS, VBA). **Desirable:** degree in Database and IT or related field, valid driving license, 1-2 years in a similar role.

### 3. INTERPRETER

The Interpreter will provide verbal and written translation, particularly in support to HALO Sri Lanka's international staff both in the field and in the office. Duties will include, providing verbal translation during meetings, minefield visits and events, and providing written/typed translation of documents.

Essential: fluency in English, Tamil and Sinhala both verbal and written, valid driving license, IT literate. Desirable: previous NGO experience.

### சாரதிகளுக்கான பதவி வெற்றிடம்

ஹலோ ட்ரஸ்ட் ஆனது பிரித்தானியர்வை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 25 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

குறிப்பு : பெண் சாரதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.


அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்களை கீழ் உள்ள முகவரிக்கு எதிர்வரும் 27ம் திகதி தை மாதம் 2020 திங்கட்கிழமைக்கு முன்னதாகப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**ஹேலோ ட்ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

# ராஜபக்ஷ கொட்டத்தை அடக்குவதற்கே சஜித்!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஜன.20

ராஜபக்சக்களின் அரசியல் பழிவாங்கல் உள்ளிட்ட அராஜக நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டவே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் களமிறங்க ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்தோ அல்லது அரசியலிலிருந்தோ ஒதுக்கிவைப்பது எமது நோக்கமல்ல. அவரையும் அரவணைத்துக் கொண்டு ராஜபக்ஷக்களின் கொட்டத்தை அடக்குவதே எமது பிரதான இலக்கு.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டுமெனில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றியடைந்தே தீரவேண்டும். சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணி களமிறங்கினால்தான் இந்த வெற்றியை எம்மால் பெற முடியும்.

அதனால்தான் சஜித் பிரேமதாஸ தலைமையில் மிகப்பெரிய கூட்டணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன. - என்றார். (எ-22)



## குருதிக்கொடை முகாம்

அளவெட்டி ஜன.20.

அளவெட்டிமாகியப்பிட்டிபுனிதசெபஸ்தியார் ஆலயத்திரு விழா இன்று இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு குருதிக் கொடை முகாம், மாகியப்பிட்டி கிராமசேவையாளர் ஜே/144 பிரிவுக்கு உட்பட்ட ,அளவெட்டி மேற்கு றோ.க.த.பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு, நேற்றுக்காலை 8 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இருபாலாரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, குருதிக் கொடை வழங்கினர். (ந-36)

## பொங்கல் விழா



கொடிகாமம் ஜன.20

வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் பொங்கல் விழா நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை காலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. பாடசாலை முன்றலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-159)

## மெய்வல்லுநர் நிகழ்வு

சாவகச்சேரி ஜன.20

சாவகச்சேரி றிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள உடற்கல்வி மற்றும் விளையாட்டு அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் இரா.இராஜசீலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (உடற்கல்வி) ந.ஸ்ரீகாந்தா மற்றும் கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடா கிளையைச் சேர்ந்த மனோகரன் அனுஜன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)

## கடனை கொடுப்பதற்கு கடன் வாங்கும் மி.சபை

கொழும்பு, ஜன.20

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கவேண்டிய கடன் தொகையை மீளச் செலுத்துவதற்காக மேலும் கடன் பெறுவதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளது.

அரச வங்கிகளூடாக கடனைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

84 பில்லியன் ரூபா கடனை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டியுள்ளது. கடன் தொகையைச் செலுத்தத் தவறினால், எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவித்தல் விடுத்திருந்தது. (எ)



## கால்கோள் விழா

கொடிகாமம் ஜன .20

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அதிபர் கே.மகிந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜெயதேவன் கலந்துகொண்டார். நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தரம் இரண்டு மாணவர்கள் தரம் ஒன்றிற்கு வருகை தந்த மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றதுடன், புதிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ந-159)

## மலர் வெளியீடும் மணி விழாவும்

கொடிகாமம்.ஜன.20

திருஞானம் மலர் வெளியீடும், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் வை.மனோகரனின் மணிவிழாவும் நடைபெற்றன.

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஆசிரியரும் கொடிகாமம் நட்சத்திரமஹால் உரிமையாளருமான த.பரமானந்தம், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் 27 வருடங்களாக ஆசிரியராக, பகுதித் தலைவராக மற்றும் பிரதி அதிபராகக் கடமையாற்றிச் சென்ற வை.மனோகரனுக்கான மணிவிழா சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் மணிவிழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

“திருஞானம்” மலரை அதிபர் க.மங்களேஸ்வரன் வெளியிட பிரதம விருந்தினர் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

திருஞானம் மலர் வெளியீட்டின் ஆய்வுரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வே.ஞானசம்பந்தன் நிகழ்த்தினார். (ஐ-159)





## மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3 ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** மகாறம்பைக்குளம், அளுத்வத்த கிராமம், மதவுவைத்தகுளம், தவசிக்குளம், லக்ஸபானா வீதி, பண்டாரிக்குளம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் மாவட்டத்தில்** முருங்கனி லிருந்து உயிலங்குளம்வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறை ஊடாக முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், செம்மண்தீவு நீர்ப்பாசன சபை, மாதோட்டம், உயித்திரசங்குளம், டொன் பொஸ்கோ ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)



# பாடசாலைகளின் வளர்ச்சி பெற்றோரின் கைகளிலேயே!

## சரவணபவன் எம்.பி. அறிவுரை

கொடிகாமம்,ஜன.20

**கிராமங்களில் இருக்கக் கூடிய பாடசாலைகளின் வளர்ச்சி, பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. உயர் பாடசாலைகளைத் தேடிச் செல்லாமல் கிராமப் பாடசாலைகளையும் முன்னேற்ற வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளை அனுமதித்து அவர்களது கற்றலுடன் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். வரணி வடக்கு அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

ஆரம்பப் பாடசாலைகளில் போட்டி மனப்பான்மையை ஒருபுறம் தள்ளிவிட்டு, குழுமமாக இயங்குவது எப்படி? வெற்றி பெறுவது எப்படி? என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் போட்டி பொறாமை எதுவுமே இருக்கக்கூடாது. பாடசாலை வளர்வதற்கு பெற்றோர்களின் ஊக்கம் தேவைப்படுகிறது. போராட்ட காலங்களில் முழுமையான வேலைகளைப் பெண்கள் தான் செய்தார்கள். ஆண்கள் வெளியிலே வரமுடியாத சூழ்நிலை இருந்தது.

இன்று கூடுதலான பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள். எங்களுடைய காலத்தில் அப்பா வேலை செய்தால் அம்மா வீட்டிலிருந்தார். பிள்ளைகளை பார்த்தார்கள். ஆகக் குறைந்தது ஐந்து பிள்ளைகள் ஓரே குடும்பத்தில் இருந்தார்கள்.

இப்போது அப்படியில்லை. எனவே நாங்கள் சிந்திக்க வேண்டும். இன்று பல இடங்களில் பாடசாலைகளை மூடுவதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். இந்த நிலைமை இங்கு ஏற்படக் கூடாது. கிராமப் பாடசாலைகளையும் முன்னேற்ற நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார். (க-159)

## நர்த்தன வர்ணமும் ஓவியக் காட்சியும்

சாவகச்சேரி,ஜன.20

தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆடற்கலை ஆற்றுகைகளைக் கொண்ட நர்த்தனம் வர்ணம் மற்றும் சித்திரப் பாட மாணவர்களால் ஆக்கப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வுகள் கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன.

மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்ட ஓவியக்கூடத்தை விருந்தினர்கள் கூட்டாகத் திறந்து வைத்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் 21 பாடசாலைகளின் மாணவர்களால் பார்வையாளர்களைக் கவரும் மற்றும் ரசிக்கக்கூடிய வகையில் காட்சிக் கூடங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த வருடம் நடாத்தப் பட்ட விஷன் 5 ஓவியங்கள் காட்சிப்படுத்லில் வைக்கப்பட்டிருந்த சித்திரங்களின் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது. முதன்மை விருந்தினர் நூலை வெளியிட முதல் பிரதியினை வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பெற்றுக் கொண்டார்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் பார்வையில் குறைபாடு காணப்பட்டு இதுவரை மூக்குக்கண்ணாடி வாங்காது பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு வவுச்சர் வழங்கப்பட்டது.

யாழ்.போதனா மருத்துவமனை கண் சிகிச்சை நிபுணர் மூலம் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டு, மூக்குக்கண்ணாடி பெறுவதற்கான 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர் தென்மராட்சி அபிவிருத்திக்கு கழகத்தினரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட உயிரியல் இரசாயனவியல் துறையின் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா, கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரஜிதா ராகவன் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக்குக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி கழகத்தின் புலம்பெயர்நாடுகளிலிருந்து வந்துள்ள கழகக் கிளைகளின் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(க-9,159)

## தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை

கொழும்பு, ஜன.20

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றன என்று கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


ஜனாதிபதிஆணைக்குழுவுக்குக்கிடைத்தமுறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வேட்பாளர்களுக்குச் சார்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்தமை, சட்ட விரோதமாகப் பதவிகள் வழங்கப்பட்டமை தொடர்பாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கல்வி அமைச்சு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீனத் தொலைக்காட்சி உள்ளிட்ட அரச நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ரீரத்னாயக்க தெரிவித்துள்ளார். (எ)

## செயல்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் செயல்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு விநாயகமூர்த்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் க.மகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் வ.நடராசாவும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-159)





# 2020 புத்தாண்டு பொதுப் பலன்கள்

## சாதகங்களும் ‘கவனத்துக்கு’ உரியவையும்!

கணிப்பவர்
கே.பி.வித்யாதரன்






## துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதம்

எவருக்கும் தீங்கு நினைக்காத உங்களின் ராசிக்குச் சந்திரன் 5ஆம்வீட்டில்நிற்கும்வேளையில் 2020ஆம் ஆண்டு பிறப்பதால், அடிப்படை வசதி வாய்ப்புகள் பெருகும். வருமானத்தை உயர்த்த அதிகம் உழைப்பீர்கள். புதிய சிந்தனைகள் உதயமாகும். வருங்காலத் திட்டங்கள் நிறைவேறும்.

2020ம் ஆண்டு துலாம் ராசிக்காரர்களுக்கு 50/50 என்கிற ரீதியில் சாதகமான பலன்களும் சாதகமற்ற பலன்களும் நடக்கக்கூடிய ஆண்டாக அமையப்போகிறது.

துலாம் ராசிக்காரர்களுக்கு முதல் ஆறு மாதங்கள் நிதானமாகத்தான் எல்லா பலன்களும் நடைபெறும். வாழ்க்கை யில் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துத்தான் எந்தச் செயலையும் செய்ய வேண்டும். ஜுன் மாதம் முடிய இந்த நிலைதான் நீடிக்கும். ஜுலை முதல் டிசம்பர் வரையிலான காலகட்டம் உங்களுக்கு நல்ல வளர்ச்சியைத் தரக்கூடிய காலகட்டமாக இருக்கும். மிகப்பெரிய அளவில் வேகவேகமாக முன்னேற்றப் பாதையில் உங்களை அழைத்துச் செல்லும்.

சாதுர்யமான பேச்சாலும் சமயோஜித புத்தியாலும் பழைய பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். வங்கிக் கடன் உதவி கிடைக்கும். சிலர் பழைய வீட்டை மாற்றிக் கட்டுவீர்கள்.

கடந்த 2019ம் ஆண்டு துலாம் ராசிக்காரர்களுக்கு அத்தனை சிறப்பானதாக அமையவில்லை. சுமாரான பலன்களே நிகழ்ந்தன. குறிப்பாக வேலை, தொழில், வியாபாரம் ஆகியவற்றில் பெரிய அளவில் பொருள் ஈட்ட முடியவில்லை.

அதற்கு நேர்மாறாக இந்த 2020ம் ஆண்டு நல்ல முன்னேற்றத்தைத் தரும். தொழில் அபிவிருத்தியும் இருக்கும். புதிய வாடிக்கையாளர்களும் உங்களிடம் வந்து சேர்வார்கள்.

ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையிலான நான்கு மாதங்கள், நீங்கள் செய்யும் முயற்சிகள், உங்களுடைய செயல்கள் இவற்றிலெல்லாம் சின்னச்சின்ன முட்டுக்கட்டைகளும் தடைகளும் வருவது இயற்கை. அவற்றின் முடிவுகள் தெரியாத நிலையில் கிணற்றில் போட்ட கல்லைப் போல் உங்களுக்கான லாபமும் வெற்றியும் தள்ளிப்போகும் வாய்ப்புக்கள் அதிகம். மெள்ள மெள்ள ஜுன் முடிந்ததும் நீங்கள் விதைத்த விதை களெல்லாம் அறுவடையாகும்.

26.12.2020 வரை தைரிய ஸ்தானமான 3ஆம் வீட்டில் சனிபகவான் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில், இந்தப் புத்தாண்டு பிறப்பதால் திடீர் யோகங்களை அனுபவிப்பீர்கள். சவாலான காரியங்களையும் சாதாரணமாக முடிக்கும் வலிமை பிறக்கும். குடும்பத்தில் உங்களின் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பெரிய மனிதர்கள், வெற்றிபெற்றவர்களின் நட்பு கிடைக் கும். வெளிநாட்டில் இருப்பவர்கள், வெளிமாநிலத்தவர்களுடன் சேர்ந்து தொழில் செய்யும் யோகம் உண்டாகும்.

வருடம் ஆரம்பிக்கும்போது செவ்வாய் 2ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். சகோதர சகோதரிகளிடம் விட்டுக்கொடுத்துப் போங்கள்.

**திட்டமிடுதலையும் எச்சரிக்கை உணர்வையும் தரும் ஆண்டு**

சிலர் வீடு மாற வேண்டிய கட்டாயம் எழும். முக்கிய பணிகளை நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது.

12.11.2200 வரை குரு பகவான் உங்களின் ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால், இலக்கை எட்டிப்பிடிக்க கடுமையாகப் போராட வேண்டிவரும். சுபச்செலவுகளும், திடீர்ப் பயணங்களும் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகைகளில் பணம் வரும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வாழ்க்கைத் துணைவர் மற்றும் பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

13.11.2020 முதல் வருடம் முடிய குரு பகவான் உங்களின் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்வதால், தாயாரின் உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். வாகனத்தில் செல்லும்போதும் சாலையைக் கடக்கும் போதும் கவனம் தேவை.

ஆண்டு பிறக்கும்போது உங்களின் ராசிக்கு 3ஆம் வீட்டில் கேது அமர்ந்திருப்பதால் புதிதாக சொத்து வாங்குவீர்கள். பெரிய பதவியில் அமர்வீர்கள். சவால்களைச் சமாளிக்கும் மனோபலம் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். 9ம் வீட்டில் ராகு நிற்பதால், தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். கவலைகள் நீங்கும்.

3.2.2020 முதல் 27.2.2020 வரை சுக்கிரன் 6ம் வீட்டில் மறைவதால் கணவன் மனைவிக்குள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். பெண்கள் உயர்கல்வியைப் போராடி முடிப்பீர்கள். மாணவர்கள், அன்றைய பாடங்களை அன்றே படித்துவிடுவது நல்லது. கணிதம், அறிவியல் பாடத்துக்குக் கூடுதல் நேரம் ஒதுக்கிப் படியுங்கள்.

வியாபாரிகள் பெரிய முதலீடுகள் செய்யாமல் இருப்பது நல்லது.

துலாம் ராசிக்காரர்கள், சின்னச் சின்ன தடைகள் வருவதைக்கண்டு பயப்படத் தேவையில்லை. கெடுபலன்கள் எதுவும் இருக்காது.

இன்னும் சொல்லப்போனால் பிறந்த ஜாதகம் வலுவானதாக இருந்தால், சின்னச் சின்ன தடைகள்கூட அகற்றப்பட்டு பெரிய வெற்றியைப் பெறுவார்கள்.

---

### தினம் ஒரு சிந்தனை

## கடனை அடைப்போம்

கடன் வாங்குவது, வாங்கிய கடனை திருப்பி அடைப்பது என்பதெல்லாம் பொருள் சார்ந்த, பொருளியல் சம்பந்தமாக இருந்தாலும், கடனை நிறைவேற்றுவதற்கு கடுமையான உடலுழைப்பும், பெரும் முயற்சியும் முதலுதவியாக அமைகிறது.

கடன் கொடுப்பது நற்குணம். வாங்கிய கடனைத் திருப்பி, கொடுக்காமல் ஏமாற்றுவது துற்குணம். இந்த ஏமாற்று வேலை இறைநம்பிக்கையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துவதுடன் அதில் அகலமான விரிசலையும் ஏற்படுத்தி விடுகிறது.

கடனின் தொடக்கம் எப்படி உருவாகிறது? அத்தியாவசியத் தேவைக்கும், அநாவசியத் தேவைக்கும் இடையே இயங்குவது, வாங்குவதுதான் கடனின் தொடக்கப்புள்ளி.

அத்தியாவசியத்திற்கு கடன் வாங்கிக் கொள்ளலாம். அநாவசியச் செலவுக்கு கடன் வாங்காமல் இருப்பது நன்று. அவசியத்திற்கு வாங்கினாலும் அதையும் முறையாக, முழுமையாகத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

‘எந்த மனிதன் கடன்பட்டு, அதை நிறைவேற்றாத எண்ணமுடையவனாக இருக்கிறானோ அவன் திருடனாகத்தான் இறைவனை சந்திப்பான்.

கடன் வாங்குவது தவறில்லை. கடனை பெறும் போது அதனைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என நல்லெண்ணத்துடன் பெற வேண்டும். அடுத்தவனை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கடன் வாங்கக்கூடாது. பெரும்பாலானோர் வாங்கிய கடனையே மறந்து விடுவார்கள். ஞாபகம் வந்தாலும் அதைக் கொடுக்கவே மாட்டார்கள். இவர்கள் அடுத்தவனின் பொருளை சுரண்டி, அவனை அழிக்க நினைக்கி றார்கள். ஆனால் அழிந்து போவது என்னவோ இவர்கள் தான்.

கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு. அதேநேரத்தில், கடன் கொடுத்தவன் கடனாளியை அவமானப்படுத்தக் கூடாது; அசிங்கப்படுத்தக் கூடாது; அடிக்கக்கூடாது; ஆபாசமாகத் திட்டக்கூடாது. இதுதான் கண்ணியமான நடைமுறை. இருவரும் தமக்கு அளிக்கப்பட்ட உரிமையில் எல்லை மீறாமல் சூக்ஷ்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

கடனை நிறைவேற்றாமல் இருப்பது சாதாரணமானது அல்ல. கடன் வாங்கி விட்டு ஏமாற்றுவது பெரிய பாவமாகும். அப்படிப்பட்டவனிடம் எங்கே இறைநம்பிக்கை இருக்கும்? இவன் புகலிடம் நரகமே.



## ஊடகவியலாளர்கள்...

ரையில் பதிவான அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள் ளது.

இதுதொடர்பாக, சர்வதேச மன்னிப்புச்சசப விடுத்திருக்கும் விரிவான அறிக்கை வருமாறு:-

இலங்கையில் மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாக வெளிவரும் பல்வேறு செய்திகள் குறித்து நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம்.

அவ்வறிக்கைகள் அல்லது செய்திகளின் பிரகாரம் 2019ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் தற்போது வரை மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வமல்லாத 12இற்கும் மேற்பட்ட பயணங்களை அரச அதிகாரிகள்(பொலிஸார்), மேற்கொண்டிருப்பதை அறிந்துகொள்ள முடிவதுடன், அவற்றை அத்துமீறல் மற்றும் அச்சுறுத்தலாகவே கருதமுடியும்.

இதற்கு மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடக செயற்பாட்டாளர்கள் இலக்காக மாறியிருப்பதுடன் அவர்களது செயற்பாடுகள் குறித்து குற்ற விசாரணைப் பிரிவு, பயங்கரவாத விசாரணைப் பிரிவு, அரச புலனாய்வுச் சேவை உள்ளடங்கலாக இலங்கைப் பொலிஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும், சில ஊடக நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் உள்நாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இத்தகைய அச்சுறுத்தும் விதமான செயற்பாடுகள் மனித உரிமைகளைப் பாதுகாப்பவர்களுக்கும் அதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களது செயற்பாடுகளுக்கான பழிவாங்கலாகவும் அமையும்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் ஊடாக அவர்கள் செயற்திறனுடன் தமது பணிகளை முன்னெடுப்பதை உறுதிப்படுத்துமாறு அரசிடம் கேட்டுக்கொள்கிறோம். கருத்துச்சுதந்திரத்தையும் ஊடக சுதந்திரத்தையும் பாதுகாப்பதுடன் அதற்கு மதிப்பளித்துச் செயற்படுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

நாடளாவிய ரீதியில் இத்தகைய செயற்பாட்டாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களைப் பிரயோகிப்பதை முடிவுக்குக் கொண்டுவரும் விதமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அனைத்துக் கட்டமைப்புக்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

இதுவரையில் பதிவான மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அத்துமீறல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாக பக்கச்சார்பற்றதும், நியாய பூர்வமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் நாம் அரசை வலியுறுத்துகின்றோம், என்றுள்ளது. (ஒ-5)

## காணாமல்...

மும் ஆராயப்பட்டுள்ளது. அதன்போதே கோத்தாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோர் உண்மையில் இறந்துவிட்டதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அல்லது கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவர்கள் தொடர்பாக தேவையான விசாரணைகள் முடிந்ததும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு உரிய உதவிகளை வழங்கமுடியும் என்றும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார். (ஒ-5)

## தீர்வு...

போராட்டம் தொடரும். எத்தனை தடைகள் வந்தாலும் அதைத் தகர்த்தெறிந்து போராடுவோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் தமிழர் தலைநகரான திருகோணமலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொங்கல் விழா நடைபெற்றது. இரா.சம்பந்தன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது போராட்டத்தைத் தோற்கடிப்பதற்காகப் பலர் முயற்சி செய்தபோதும் அது இன்னும் பன்மடங்கு பலத்துடன் எமது மக்களின் ஆணையுடன் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. இந்த ஒற்றுமை எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும் வரை நிலைத்திருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் மக்களின் ஜனநாயக முடிவைத்தான் நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதனடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்த குரலில் எவருக்கும் அடிபணியாது செயற்பட்டு வருவதால் இன்று சர்வதேச சமூகமும் எம்மை அங்கீகரித்து எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்று இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

எமது தீர்வு நோக்கிய பயணம் சிறப்பாகவே நகர்ந்து சென்றது. பெரும்பான்மையின மக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்ப நிலையே இந்த ஆட்சி மாற்றத்துக்குக் காரணம். இருப்பினும் நாம் எமக்கான தீர்வு கிட்டும்வரை உறுதியாகவும் தெம்பாகவும் செயற்படுவோம்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்க ப்பட்டுள்ள தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் - என்றார். (ஒ-5-22)

## பட்டப்பகலில்...

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் 24ஆம் திகதியும், ஊடகவியலாளரின் வீட்டின் மீதும் அதற்கு அருகிலிருந்த வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. ஒரு மாத காலத்துக்குள் இரண்டாவது தடவையாகவும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டின் கேற் மற்றும் வேலி என்பன வாளால் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. 5 பேர் கொண்ட கும்பல் எந்த முகமறைப்பும் இன்றி இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5.26.106)

## சகல...

தொழிலை எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பட்டதாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச, பகுதியளவு அரச மற்றும் திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆள்சேர்க்கும் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளது. தொழில்வாய்ப்புகளை பெறுவோருக்கு தலைமைத்துவம் மற்றும் அரச சேவை பற்றிய முறையான பயிற்சியும் விளக்கமும் வழங்கப்படவுள்ளது.

மக்களுக்கு பொறுப்புக்கூறும் அரச சேவையொன்றையும் அரச ஊழியர்களையும் உருவாக்குவதே எனது நோக்கமாகும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஒரு பலமான அடிப்படையுடன் கைத்தொழில் துறை நாட்டில் கட்டியெழுப்பப்படவில்லை. நாட்டின் எதிர்கால பயணத்துக்கு உள்ள பெரும் பலம் மனிதவளமாகும். நாட்டின் கற்ற இளையோர்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து, அவர்களைப் பொருளாதார அபிவிருத்திக்கு பங்காளர்களாக ஆக்குவது முக்கிய தேவையாகும்.

ஒரு சிறு பிரிவினரால் ஏற்படும் தவறுகளின் காரணமாக முழு அரச சேவையின் மீதும் குற்றம் சுமத்தப்படும் நிலை உருவாகியுள்ளது. அன்றாடம் இடம்பெறும் தவறுகள் முழு அரச சேவைக்கும் இழுக்கை ஏற்படுத்துகின்றது. எதிர்காலத்தில் அனைத்து பிள்ளைகளையும் நாட்டின் பொருளாதாரத்தின் பங்காளர்களாக மாற்றும் கல்வி முறைமையொன்று திட்டமிடப்பட்டு வருகின்றது.

உலகின் ஏனைய நாடுகளின் தொழில் வாய்ப்புகளுக்கு பொருத்தமான வகையில் கல்வி முறைமையை தயாரிக்க வேண்டிய தேவையுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற் சந்தைகளுக்கு பொருத்தமான வகையில் புதிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட மூலோபாயத்தின் ஊடாகவே அதனை செய்ய வேண்டும். இளையோர்கள் தொழிற் தேடிச் செல்வதற்கு பதிலாக தொழில் வாய்ப்புகள் இளையோரைத் தேடிவரும் கல்வி முறைமையொன்றை விரைவாக ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ஒ - 5)

## விக்னேஸ்வரன்...

மாகப்படுகின்றது. அவரை உள்வாங்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமான சக்தியாக திகழும். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த மாதம் 8ஆம் திகதி எமது கட்சியின் 50ஆவது ஆண்டு விழாவை நடத்தவுள்ளோம். எமது கட்சியின் செயலரையும், தவிசாளரையும் அன்றைய தினம் தெரிவு செய்யவுள்ளோம். எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை நாம் மீள அழைக்கப்போவதில்லை. அவர்களுக்கு எமது கட்சியில் இடமில்லை.

கூட்டமைப்பின் தலைமை மாறினால் அதில் இணையத் தயார் என்று முன்னாள் முதலமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்து என்னைப் பொறுத்த வரை நல்லவிடயமாகப்படுகிறது.

கூட்டமைப்புக்குள் பேசி அப்பிடி ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியைச் செய்யலாமே தவிர இது ஒரு சாத்தியமான விடயம் என்று நான் கூறமுடியாது. நாம் ஒற்றுமையாகச் செயற்பட்டு தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்தால் வடகிழக்கிலே அதிக ஆசனங்களைப் பெற்று எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆணையை வலுவாக பெற்றிருக்க முடியும். அவரும் வெறும் பேச்சிலே கருத்துக்களைச் சொல்லக்கூடாது, என்றார். (ஒ-5-110)

## ரெலோ...

மூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தலைமைத்துவக் குழுக் கூட்டத்தை கட்சியின் மூத்த உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர்.

ரெலோவின் தலைமைத்துவக் குழுக் கூட்டம் வவுனியா வைரவப்புளியங்குளத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோவுக்கு தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் எத்தனை ஆசனங்கள் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக தமது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக தலைமைத்துவக் குழுக் கூட்டத்தையே ரெலோ நேற்றுக்கூட்டியிருந்தது.

இருப்பினும் யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் அம்பாறை மாவட்டம் என்பவற்றுக்கு வேட்பாளர்களாக சிலரை நியமித்து விட்டு இந்தக் கூட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவித்து தலைமைத்துவக் குழு உறுப்பினர்கள் சிலர் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தனர். இதனால் மீண்டும் ரெலோவுக்குள் பிணக்குநிலை விஸ்வரூபமெடுத்துள்ள விடயம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

சிறிரெலோ அமைப்பிலிருந்து விலகி தற்போது ரெலோவில் இணைந்துள்ள ஒருவருக்கு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையுடன் கலந்துரையாடாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் சிலர் நேற்றைய கூட்டத்தைப் புறக்கணித்து , அதில் கலந்து கொள்வதைத் தவிர்த்தனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனுக்கு வாய்ப்பு வழங்கக் கூடாது என்று கட்சியின் உப தலைவர் ஹென்றி மகேந்திரன் போர்க் கொடி தூக்கியுள்ளார். கட்சித் தீர்மானத்தை மீறி வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் பங்கேற்றமை உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்கள் கோடீஸ்வரன் மீது சுமத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் கோடீஸ்வரன் கட்சியின் தலைமைத்துவக் குழுக் கூட்டத்தில் நேற்றுப் பங்கேற்றுள்ளார். ஆனால் ஹென்றி மகேந்திரன் நேற்றைய கூட்டத்துக்கு வரவில்லை. ஏற்கனவே ரெலோவின் முக்கியதஸ்தர்களான சிவாஜிலிங்கம், ஸ்ரீகந்தா ஆகியோர் முரண்பட்டு, ரெலோவில் இருந்து வெளியேறி, புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ள நிலையில், வேட்பாளர் தெரிவால் ரெலோ மீண்டும் சிதறுண்டு போகும் நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஒ-5)











# இன்றைய நாள்

**மேடம்**: ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். எதிர்மறையாகத் தெரிந்த செயல் நன்மை தரும். அதிக உழைப்பு தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**இடபம்**: செயல்களில் நேர்த்தி உருவாகும். உழைப்பிற்கான பலன் அதிகரிக்கும். தொழில்,வியாபாரத்தில் போட்டி விலகும். ஆதாய பணவரவினால் சேமிப்பு கூடும்.

**மிதுனம்**: பணி தாமதம் ஆவதால் சஞ்சலம் உருவாகும்.நல்லோரின்ஆலோசனைவெற்றி தரும். தொழில், வியாபாரம் சீராக கூடுதல் பணிபுரிவீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்

**கடகம்**: செயல்கள் அளவான வெற்றியைத் தரும். தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமையைப் பின்பற்றுங்கள். அத்தியாவசிய செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும். சந்தோஷ நிகழ்வுகளை நண்பர்கள் பகிர்ந்து கொள்வர்.

**சிம்மம்**: எவரிடமும் கருணை மனதுடன் பழகுவீர்கள். அமைதித்து பேசியவர், அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம்உண்டாகும். ஆதாயபணவரவு கிடைக்கும்.

**கன்னி**: சிறு செயலும் கடினமாக தோன்றும். உறவினரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சிக்கு அதிக உழைப்பு உதவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**துலாம்**: மனதில் உற்சாகம் அதிகரிக்கும். பணிகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். எதிர்காலத் தேவைக்கு பணம் சேமிப்பீர்கள்.

**விருச்சிகம்**: வேண்டாத நபரை பொது இடத்தில் சந்திக்க நேரிடலாம். பழைய நினைவுகள் தொந்தரவு தரும். தொழில், வியாபாரம் செழிக்க அதிகம் பணிபுரிவது அவசியம்.

**தனுசு**:மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். சந்தோஷ் முகத்தோற்றம் பெறுவீர்கள். தொழில்,வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்**: புதியவர் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்**:குறை சொல்ல சிலர் காத்திருப்பர். அளவுடன் பேசுவதால் நன்மை பெறலாம். தொழில், வியாபாரத்தில் புதிய நுட்பங்களை பயன்படுத்தவும். கடன் பெறுவீர்கள்.

**மீனம்**: மனதில் குழப்பம் ஏற்படலாம். முக்கியமான செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் மாற்றம் செய்வது அவசியமாகும். கடன் பெறுவீர்கள்.

# போர் நிறுத்தத்தை மீறுகின்றது சிரியா

## எர்டோகன் குற்றச்சாட்டு



**டமஸ்கஸ், ஜன. 20**

**போர் நிறுத்த ஒப்பந்தத்தை சிரிய அரசு மீறுவதாக துருக்கி அதிபர் எர்டோகன் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து துருக்கி அதிபர் எர்டோகன் கூறும்போது, 'சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிரிய அரசு நடத்திய தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர். சிரிய அரசு தொடர்ந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி வருகிறது' என்றார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இட்லிப் பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. எனினும், தொடர்ந்து வன்முறைகள் நடந்து வருகின்றன.

இதன் காரணமாக பொதுமக்கள் மிகுந்த பாதிப்படைந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக, கடந்த ஆண்டு துருக்கி எல்லையையொட்டிய சிரியாவில் குர்து போராளிகள் எல்லையோரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்று கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்த துருக்கி அதிபர் எர்டோகன் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து சிரியாவில் துருக்கிப் படையினர் தாக்குதல் நடத்தினர். துருக்கியின் தாக்குதல் காரணமாக சுமார் 4 லட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறினர். பொதுமக்களில் பலர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



ஆஸ்திரேலியாவில் கடந்த நான்கு மாதங்களாகப் பற்றியெரிந்த காட்டுத் தீ இந்த வாரம் மிகையாகக் குறையத் தொடங்கியுள்ளது. மூன்று மாதங்களில் பெய்ய வேண்டிய மழை ஒரே இரவில் பெய்ததை அடுத்து காட்டுத் தீ தானாகக் கட்டுக்குள் வந்துள்ளது. மழையால் வீதியில் வழிந்தோடும் தண்ணீரை வனவிலங்குகள் பருகும் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. (ம)




# குள்ள மனிதர் இறப்பு

காத்மண்டு, ஜன. 20

உலகிலேயே உயரம் குறைவான ஆண் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த ககேந்திர தாபா மாகர் உடல்நலக் குறைவால் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு வயது 27.

நேபாளத்தைச் சேர்ந்தவர் ககேந்திர தாபா மாகர். இவர் 67.08 செ.மீ. உயரம் கொண்டவர். இதன் காரணமாக உலகின் உயரம் குறைவான உயரம் கொண்ட ஆண் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தார். இந்த நிலையில் நிமோனியா நோயின் காரணமாக அவர் நேற்று உயிரிழந்தார். (ம)

# சாவுக்கு ஆதரவு!



டோக்கியோ, ஜன. 20

ஜப்பானில் சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அந்த நாட்டில் 80 வீதமான மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

உலகில் சில நாடுகளில் கடும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சமாக சாவுத் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஜப்பான் அரசும் அதை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சிந்தித்து வருகின்றது. சாவுத் தண்டனை தொடர்பாக மக்களிடம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. அதில், 80 சதவீத மக்கள் சாவுத் தண்டனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக ஜப்பான் அரசு நேற்று அறிவித்தது. அதன்படி, 9 சதவீத மக்கள் மட்டுமே சாவுத் தண்டனை நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (ம)

# சீனாவில் பிறப்புவீதம் பெரும் சரிவு

பீஜிங், ஜன. 20

கடந்த 1949ஆம் ஆண்டில் சீனாவில் கம்யூனிஸ்ட் அரசு பதவியேற்றது. பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த கடந்த 1970ஆம் ஆண்டில் அந்த நாட்டில் 'ஒரு குழந்தை' கொள்கையை நடைமுறைப்படுத்தியது. இதன் மூலம் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து இளைஞர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது. மனித வளம் குறைந்து வருவதை உணர்ந்த சீன அரசு கடந்த 2016ஆம் ஆண்டில் 'ஒரு குழந்தை' கொள்கையைக் கைவிட்டு 'இரண்டு குழந்தைகள்' திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. ஆனால் அதன்பிறகும் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரிக்கவில்லை.



சீன அரசின் புள்ளிவிவரத்தின்படி கடந்த 2018ஆம் ஆண்டில் சீனாவில் ஒரு கோடியே 50 லட்சத்து 23 ஆயிரம் குழந்தைகள் பிறந்தனர். கடந்த 2019ஆம் ஆண்டில் ஒரு கோடியே 40 லட்சத்து 65 ஆயிரம் குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளன. கடந்த ஆண்டைவிட 9 லட்சத்து 58 ஆயிரம் குழந்தைகள் குறைவாகப் பிறந்துள்ளன. சீனாவில் கம்யூனிஸ்ட் அரசு கடந்த 1949ஆம் ஆண்டில் பதவியேற்ற பிறகு முதல்முறையாக குழந்தைகள் பிறப்பு விகிதம் மிகவும் சரிந்துள்ளது.

**முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பு**

இதுகுறித்து அமெரிக்காவைச் சேர்ந்த சீனப் பேராசிரியர் யீ புகுஜியன் கூறும்போது, 'சீனாவின் மக்கள் தொகை தற்போது 140 கோடியாக உள்ளது. அங்கு முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உழைக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து வருகிறது. இதனால் பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகிறது. இதற்குத் தீர்வு காண ஒரு குழந்தை திட்டத்தை சீன அரசு இல்லாமல் செய்தது. ஆனால் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை. சீனப் பெற்றோர் சிறிய குடும்பத்தையே விரும்புகின்றனர். ஆணோ, பெண்ணோ ஒரு குழந்தையை மட்டுமே பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். இதுவே குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்து வருவதற்கு முக்கிய காரணம்' என்று தெரிவித்தார். (ம)




ஈரானுக்கு எதிராக அமெரிக்காவின் தாக்குதல்களைக் கண்டித்து அமெரிக்க அதிபர் ட்ரம்புக்குச் சொந்தமான விடுதிக்கு முன்னால் நூற்றுக் கணக்கான அமெரிக்கர்கள் இணைந்து போராட்டங்களை நடத்தியுள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 08 . 1961



மறைவு 19 . 01 . 2020

### இராசையா கேதீஸ்வரன்

கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கேதீஸ்வரன் நேற்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - வீரலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், இராசரத்தினம் - காலஞ்சென்ற சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், டயலயினியின் (டயா) பாசமிகு கணவரும், அக்ஷயனின் (யா/கோப்பாய் சரவணபவானந்தா மகா வித்தியாலயம்) பாசமிகு தந்தையும், தேவசேனாம்பாள், விஜியராணி, காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் சிறிதரன், சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜெயானந்தம் மற்றும் குருமூர்த்தி, சற்குணம், பாமா, காலஞ்சென்ற சந்திரமோகன் டயலஸ்காந்தன் (கண்ணன்), இராஜசேலியன் (பாபு), சுதர்ஷினி (உஷா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.(பிரதேச சபை வீதி)**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(CS/30706)(11,17) **077 341 3163**

# அந்தியேட்டி அழைப்பு

கடந்த 22.12.2019 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர்**

## இராசையா பரமேஸ்வரி



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.01.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், நண்பகல் 12.00 மணியளவில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோட்டைக்காடு, மல்லாகம்.
077 492 5320, 077 967 2015 (cs.30705) (13.17) குடும்பத்தினர்

## பொற்பதி இந்து சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன. 20
நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டு விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான சதுரங்கத்தில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழக அணி வீரர் கனாதீபன் தங்கப்பதக்கம் வென்றார்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரர் ரிஷிகரன் வெள்ளிப் பதக்கத்தையும், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணி வீரர் மோகனரூபன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (ம-23)




# நவஜீவன்ஸ் சம்பியனானது

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி கிண்ணம் வென்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சிவகுமரன் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 25:20, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422)

# கே.ஸி.ஸி.ஸி வீராங்கனைகளுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 20
நல்லூர்பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரம் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக வீராங்கனைகளான ஈ.டிசாந்தி, ஆர்.பவதாரணி இணை தங்கப்பதக்கம் வென்றது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக வீராங்கனைகளான எஸ்.ஹரினி, எஸ்.சகானா இணை வெள்ளிப் பதக்கம் வென்றது. (ம-23)






## தனிநபர் கரம் கேசாயினி சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜன. 20
நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருட கரம் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கே.ஸி.ஸி.ஸி அணியைச் சேர்ந்த கே.கேசாயினி தங்கப்பதக்கம் வென்றார். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக வீராங்கனை பி.விதுசனா வெள்ளிப் பதக்கத்தை வென்றார். (ம-23)

## அடம்பன் றோ.க.த.கவுக்கு வெள்ளி

யாழ்ப்பாணம், ஜன. 20
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட செயற்பட்டு மகிழ்வோம் தரம் மூன்றுக்கான போட்டியில் மன்னார் அடம்பன் றோ.க.த.க பாடசாலை வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

கண்டி நாவலப்பிட்டி ஜெயதிலக மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் தரம் மூன்றுக்கான ஆண், பெண் இணைந்த போட்டியில் மன்னார் அடம்பன் றோ.க.த.க. பாடசாலை வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தது. (ம-422)



## சிறப்பாக நடைபெற்ற மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் சைக்கிள் ஓட்டப் போட்டி

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியின் ஓர் அங்கமான சைக்கிள் ஓட்டப்போட்டி அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

120க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்ட சைக்கிள் ஓட்டப் போட்டியானது முசலி கொக்குப்படையான் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு அரிப்புத்துறை நானாட்டான் வங்காலை தள்ளாடி வழியாக பாடசாலையைச் சென்றடைந்தது. (ம-213)



## நர்மதா, பதுமிதா இணை சம்பியன்





யாழ்ப்பாணம், ஜன. 20
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்கள் இரட்டையர் மேசைப்பந்தாட்டத்தில் வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழக அணி வீராங்கனைகளான ஏ. நர்மதா, எஸ்.பதுமிதா இணை சம்பியனானது.


கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி வீராங்கனைகளான எஸ்.அனோஜிகா, என்.கலைஜா இணை வெள்ளிப் பதக்கத்தை வென்றது. (ம-23)


## நர்மதா வென்றார் தங்கம்


யாழ்ப்பாணம், ஜன. 20
நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவு மேசைப்பந்தாட்டத்தில் வை.எம்.எச்.ஏ கழகத்தைச் சேர்ந்த ஏ.நர்மதா தங்கப்பதக்கத்தை வென்றார். கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி வீராங்கனை எஸ்.அனோஜிகா வெள்ளிப் பதக்கத்தை வென்றார். (ம-23)



# மக்ரேகர் மரண அடி







## வெறும் 40 செக்கன்களில் கரோனின் கதை முடிந்தது

மிகப்பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற யு.எவ்.சி சம்பியன்ஷிப் போட்டியில் கரோனுக்கு மரண அடிகொடுத்து வெறும் 40 செக்கன்களில் வெற்றிபெற்றார் மக்ரேகர்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற போட்டியொன்றில் இந்த இருவரும் மோதினர். அதில் கரோன் வெற்றிபெற்றார். இருவரும் மிகப்பெரும் பகையாளிகள் என்பதால் போட்டி முடிந்ததும் இருவரின் சகாக்களும் மோதினர். பொலிஸாரை வரவளைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அளவுக்கு நிலைமை தீவிரமானது. இதையடுத்து இந்த இருவருக்கும் இடையில் யு.எவ்.சி.சம்பியன்ஷிப் சண்டை நேற்று நடத்தப்பட்டது. மில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதியுடைய இந்தப் பந்தயம் அமெரிக்காவின் லொஸ் வெகாஸ் நகரில் போட்டி இடம்பெற்றது. பலத்த பாதுகாப்புக்களுக்கு மத்தியில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் வெறும் 40 செக்கன்களில் கரோனை நொக்அவுட் செய்தார் மக்ரேகர்.

கடந்த சில மாதங்களாக யு.எவ்.சி சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு திரும்பாமல் இருந்த மக்ரேகர் எதிர்பாராத வெற்றியுடன் தனது மறுவருகையை ஆரம்பித்துள்ளார். (ம)

மக்ரேகர்

# 2021 ஐ.பி.எல்லிலும் சி.எஸ்.கேயில் டோனி

2021ஆம் ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல் தொடரில் டோனி சென்னைக்காக நிச்சயம் விளையாடுவார். எவ்வளவு தொகை கொடுத்தேனும் டோனியை ஏலத்தில் எடுப்பேன் என்று தெரிவித்தார் சிறீனிவாசன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'டோனி தொடர்ந்து விளையாடுவாரா அல்லது ஓய்வு பெறுவாரா எத்தனை ஆண்டுகள் விளையாடுவார் என்ற கேள்விகளைப் பலரும் கேட்கிறார்கள். பேசுகிறார்கள்.

நான் கூறுகிறேன். டோனி விளையாடுவார் என்று உறுதியாகக் கூறுகிறேன். இந்த ஆண்டு ஐபிஎல் போட்டியில் சிஎஸ்கே அணியில் விளையாடுவார், அடுத்த ஏலத்திலும் டோனி சிஎஸ்கே அணியில் தேர்வு செய்யப்படுவார், தக்கவைக்கப்படுவார். அதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை' எனத் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரின்போது அணிகள் அனைத்தும் ஒரு வீரரையேனும் தக்கவைக்காமல் அணியை முழுவதுமாகக் கலைக்க வேண்டும். இந்த நிலையில் மீண்டும் சென்னை அணிக்காக டோனியை ஏலத்தில் எடுக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் சிறீனிவாசன். (ம)



# கறுப்புப் பட்டியுடன் இந்திய வீரர்கள்

பெங்களூருவில் நடந்து வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி வீரர்கள் கையில் கறுப்புப் பட்டி அணிந்து களமிறங்கினர். சமீபத்தில் இந்திய அணியின் முன்னாள் வீரர் பாபு நட்கர்னி மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலும், மரியாதை செலுத்தும் வகையிலும் கையில் கறுப்புப் பட்டை அணிந்து இந்திய வீரர்கள் களமிறங்கினர். (ம)



# செவில்லாவை வென்றது ரியல் மட்ரிட்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ்லீக்தொடரில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது.

மட்ரிட்டை எதிர்த்து செவில்லா மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் மட்ரிட் வெற்றி பெற்றது.

மட்ரிட்டின் சார்பாக 59ஆவது மற்றும் 63ஆவது நிமிடங்களில் காஸ்மிரோ கோல்களைப் பதிவு செய்தார். 64ஆவது நிமிடத்தில் செவில்லாவின் கோலைப் பதிவுசெய்தார் டி ஜொங். (ம)

# ஸ்கந்தாவின் வீதியோட்டம்



சுன்னாகம், ஜன. 20

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட வீதியோட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஆண்களுக்கான வீதியோட்டம் கல்லூரியின் பிரதான வாயிலில் ஆரம்பமானது. கல்லூரியின் விளையாட்டுத்துறை முதல்வர் ஆசிரியர் ஆர். இராஜகாந்தனின் ஒழுங்கமைப்பில் அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வை பிரபல கட்டட ஒப்பந்ததாரர் எஸ்.வசீகரன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். இந்த வீதியோட்ட மானது பாடசாலை முன்றலில் ஆரம்பித்து கந்தரோடை உடுவில் மருதனார்மடம் மற்றும் சுன்னாகம் வழியாக மீண்டும் பாடசாலையில் நிறைவுபெற்றது. இதேவேளை பெண்களுக்கான வீதியோட்டம் சுன்னாகம் அந்தேனியார் ஆலய முன்றலில் உடுவில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஜசிதரன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வும் பாடசாலையில் நிறைவு பெற்றது. ஆண்களுக்கான நிகழ்வில் முதலிடத்தை கி.கிஷானும் பெண்களுக்கான நிகழ்வில் முதலிடத்தை சூ.வைஷ்ணவியும் பெற்றுக்கொண்டனர். இந்த வீதியோட்ட நிகழ்வுக்கான பூரண அனுசரணையை அமரர் லயன் மகாதேவா பூமாதேவி குடும்பத்தினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ந)

# பைங்கரன் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜன. 20

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் உரும்பிராய் பைங்கரன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் பைங்கரன் அணியை எதிர்த்து உரும்பிராய் ஒஸ்கா அணி மோதியது.

இதில் உரும்பிராய் பைங்கரன் அணி 25:18, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ம-422)



**வீடு வாடகைக்கு**

யாழ் இந்துக்கல்லூரிக்கு அண்மையாக 2 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது.

071 377 4860, 076 427 9505

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி

A/L 2020 மாணவர்களுக்கான

ICT | Maths(7) | Agri | Geography | Media

077 248 7774

வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்

25.01.2020 சனிக்கிழமை

**A/L வரலாறு**

M.பத்மன் B.A (Hons) His . Spl. M.A. (His)

- வடமாகாணத்தின் முதல்தர வரலாற்றாசிரியர் என்ற நிலைக்கு பெறுபேறுகளால் உயர்த்திய எனது மாணவர்களுக்கு நன்றிகள்
- **2019 A/L** பெறுபேறுகளின்படி என்னிடம் கற்ற மாணவர்களில் **40** இற்கு மேற்பட்ட மாணவர்கள் **"A"** சித்தியைப் பெற்றுள்ளனர்.
- யாழ். மாவட்டத்தில் முதல் 20 இடங்களுக்குள் 9 பேர் உள்ளனர். (புதிய, பழைய பாடத்திட்டத்தில்)
- **100%** சித்தியுடன் சாதனை படைத்த எனது மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

கற்பிக்கும் இடங்கள்

D. M. I யாழ்ப்பாணம் | உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி | BITSMANS மானிப்பாய்

Note: **2019 - A/L** பெறுபேறுகளில் என்னிடம் கல்வி கற்று வரலாறு பாடத்தில் **"A"** தர சித்தி பெற்ற மாணவர்கள் தமது சிறிய புகைப்படம் ஒன்றை தாங்கள் கற்ற கல்வி நிலையத்தில் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (J.452) (13.17)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

021 222 6113



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.